# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 521 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை (16.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 14 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## ராஜபக்ஷவின் தாயார் இருந்திருந்தால் கோட்டாபயவை மன்னித்திருக்க மாட்டார்!



ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க

02 பக்கம்

## மின்வெட்டு நேரம் அதிகரிக்கும் அபாயம்!

பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை

02 பக்கம்

# வன்முறை சேதங்கள் பட்டியலிடப்பட்டன!



74 எம்.பிக்களின் சொத்துகளுக்கு சேதம்

100இற்கும் மேற்பட்ட வீடுகள், 250இற்கு அதிகமான மோட்டார் சைக்கிள்கள், 50இற்கு மேலான வாகனங்களும் தீக்கிரை

யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த 9ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் இதுவரை 74 நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதில் 250இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள், 100இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 50இற்கும் மேற்பட்ட வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

02 பக்கம்



## ரணில் அரசுக்கு ஆதரவு: மைத்ரி அதிரடி அறிவிப்பு!

### நாடாளுமன்றம் கூடிய பின் புதிய அமைச்சரவை நியமனம்



யோ.தர்மராஜ்

புதிய பிரதமரின் கீழ் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஆதரவளிக்கும் என அதன் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

02 பக்கம்

## டீசல் தாங்கிய கப்பல் இலங்கை வந்தடைந்தது

டீசல் தாங்கிய கப்பல் ஒன்று இந்தியாவிலிருந்து நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது. இந்திய கடன் எல்லை வசதி திட்டத்தின் கீழ் குறித்த எரிபொருள் கப்பல் வந்திருப்பதாக தெரியவந்துள்ளது.

02 பக்கம்

## பாதுகாப்பை தீவிரப்படுத்தக் கோரி பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை

நாடு முழுவதும் காணப்படும் நிலைமைகளின் அடிப்படையில் சட்டம், ஒழுங்குகளை தொடர்ந்தும் பாதுகாப்பதற்காக - அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் குற்றங்களை தடுப்பதற்காக ரோந்து பணிகளை அதிகரிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விசேட சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



ரணிலுக்கு ஆதரவளிக்காத பட்சத்தில, தான் மட்டும்தான் கட்சியில் இருக்க வேண்டி வருமென்பது மைத்ரிக்கு தெரிஞ்சுட்டுது போல..

## கட்சியின் முடிவையும் மீறி ரணில் அரசுக்கு ஆதரவு



### சுதந்திரக் கட்சி எம்.பி. சாமர சம்பத் முடிவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளார்.

02 பக்கம்

## 21ஆவது திருத்தம் குறித்தான பேச்சுகள் உடனடியாக ஆரம்பம்

### பிரதமர் ரணில் அறிவிப்பு

யோ.தர்மராஜ்

21ஆவது திருத்தம் குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான மாதிரி வரைபை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, பொருளாதார நெருக்கடி தொடர்பான முழுமையான அறிக்கையை இன்று வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடன்...

» 02 பக்கம்

## உண்டியல் முறையில் நாணய பரிமாற்றம்

### இருவர் கைது

உண்டியல் முறையினூடாக அமெரிக்க டொலரை நாணய பரிமாற்றம் செய்வதற்கு முற்பட்ட இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொரலஸ்கமுவ மற்றும் பில்லேவ பகுதிகளிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

02 பக்கம்

### வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய

## 230 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த 9ஆம் திகதிமுதல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் 230 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

### உஷ்



முன்னாள் வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆட்சியில் பதவியொன்றை பொறுப்பேற்க நிபந்தனைகள் சிலவற்றை விதித்தாராம். ஆனால், அந்த நிபந்தனைகளை ஏற்க முடியாதென பிரதமர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாம். அத்துடன், விக்கிக்கு பதவி கொடுத்தால் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவது எவ்வாறு என்று ரணில் யோசனை செய்கிறாராம்.

## டீசல் பற்றாக்குறையால் போக்குவரத்து கட்டுப்பாடு

தனியார் பஸ்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட உள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

டீசல் பற்றாக்குறையால் பஸ் சேவைகளை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் போராளிகளின் தாக்குதல் முயற்சி செய்தி!

### இந்தியாவிடம் தகவல் கோருகிறது இலங்கை

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் எதிர்வரும் மே 18ஆம் திகதி தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாக இலங்கை, இந்திய புலனாய்வு அமைப்புகளிடம் விபரங்களை கோரியுள்ளது. இலங்கையில் மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய உளவுத்துறையை மேற்கோள் காட்டி 2022ஆம் ஆண்டு மே 13ஆம் திகதியன்று த இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

02 பக்கம்




## வன்முறை சேதங்கள்...

அதன்படி, நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சேதமாக்கப்பட்ட 74 உறுப்பினர்களின் முழு சொத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வீரகெட்டிய வீடு சேதமாக்கப்பட்டுள்ளதுடன், அவருடைய தாய் தந்தையின் கல்லறையும் தந்தையின் உருவச்சிலையும் சேதமாக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஸ் குணவர்தனவின் அலுவலகம் மற்றும் கிருலப்பனை வீடு.

ரமேஷ் பத்திரணவின் காலி வீடு.

பிரசன்ன ரணதுங்கவின் வீடு, அலுவலகம், ஒன்றுக்கூடல் மண்டபம், 200 மோட்டார் சைக்கிள் மற்றும் 3 வாகனங்கள்.

விமலவீர திசாநாயக்கவின் வீடு மற்றும் அவருடைய மகனின் வீடு.

மொஹான் பிரியதர்ஷன டி சில்வாவின் காலி, ரத்கமவிலுள்ள இரு வீடுகள் மற்றும் ரத்கம அலுவலகம்.

விதுர விக்ரமநாயக்கவின் வீடு, அலுவலகம் மற்றும் 3 வாகனங்கள்.

செஹான் சேமசிங்கவின் வீடு மற்றும் 3 வாகனங்கள்.

கனக ஹேரத்தின் இரு வீடுகள், அலுவலகம், 4 வாகனங்கள், வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிப்பு மற்றும் தந்தையின் தோட்டம் சேதமாக்கப்பட்டு, கட்டிடமும் தீ வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சன விஜேசேகரவின் வீடு மற்றும் 3 வாகனங்கள்

தேனுக விதானகேவின் 2 பஸ்கள் மற்றும் 2 கட்டடங்கள்.

கலாநிதி நாலக கொடஹேவாவின் கம்பஹா அலுவலகம் மற்றும் வீடு.

பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் அநுராதபுர அலுவலகம்.

நசீர் அஹமட்டின் வீடு, அலுவலகம், இரு தொழிற்சாலைகள், வர்த்தக நிலையம் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள்

அருந்திக்க பெர்னாண்டோவின் வீடு, அலுவலகம் மற்றும் வாகனம்

சனத் நிஷாந்தவின் வீடு, அலுவலகம், 3 மோட்டார் சைக்கிள், 2 டெக்டர் மற்றும் ஒரு முச்சக்கர வண்டி

தாரக பாலசூரியவின் வீடு மற்றும் 3 வாகனங்கள்

இந்திக்க அநுருத்தவின் இரு வாகனங்கள், 50 மோட்டார் சைக்கிள்கள், இரு அலுவலகங்கள் மற்றும் இரு வீடுகள்

ஸ்ரீபால கம்லத்தின் வீடு மற்றும் அலுவலகம்

அநுராத ஜயரத்னவின் கம்பளை அலுவலகம்

டி.வி. சாணக்கவின் தங்கல்ல அலுவலகம்

சிசிர ஜயகொடியின் அலுவலகம்

பிரசன்ன ரணவீரவின் வீடு, 6 வாகனங்கள் மற்றும் அலுவலகம்

டி.பி. ஹேரத் வாரியபொல வீடு

வைத்தியர் கீதா அரம்பேபொலவின் இரு வாகனங்கள் மற்றும் வீடு

ரோஹண திசாநாயக்கவின் வீடு

சாந்த பண்டாரவின் வீடு, 3 மோட்டார் சைக்கிள்கள், ஜீப் வண்டி மற்றும் ஒரு முச்சக்கரவண்டி

அஷோக பிரியந்தவின் 2 வீடுகள், 14 வாகனங்கள் மற்றும் ஒரு வர்த்தக நிறுவனம்

கபில அதுகோரளவின் வீடு

கீதா குமாரசிங்கவின் இரு வீடுகள் மற்றும் 3 வாகனங்கள்

குணபால ரத்னசேகரவின் வீடு

சமல் ராஜபக்ஷவின் மாஹம வீடு, திஸ்ஸ வீடு, மெதமுலன வீடு, திஸ்ஸ அலுவலகம்

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வீடு, வாகனம், அலுவலகம் மற்றும் வியாபார நிலையம்

காமினி லொக்குகேவின் 3 வீடுகள், இரு வாகனங்கள் மற்றும் இரு அலுவலகங்கள்

கலாநிதி பந்துல குணவர்தனவின் இரு வீடுகள் மற்றும் இரு வாகனங்கள்

ஜானக பண்டார தென்னகோனின் தம்புள்ள வீடு

சி.பி. ரத்னாயக்கவின் ஹரஸ்பெத்த அலுவலகம்

கெஹேலிய ரம்புக்வெல்லவின் வீடு

எஸ்.எம். சந்திரசேனவின் வீடு, அலுவலகம், ஒன்றுகூடல் மண்டபம் மற்றும் வியாபார நிலையம்

மஹிந்தானந்த அளுத்கமகேவின் நாவலப்பிட்டி அலுவலகம்

ரோஹித அபேகுணவர்தனவின் இரு அலுவலகங்கள், இரு வீடுகள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள்

நாமல் ராஜபக்ஷவின் மனைவியின் வீடு

ரொஷான் ரணசிங்கவின் வீடு உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளை, இரு வாகனங்களுக்கு சேதம்

சஷிந்திர ராஜபக்ஷவின் செவனகல வீடு

ஜயந்த கெட்டகொடவின் வீடு மற்றும் சகோதரரின் வீடு

அமரகீர்த்தி அத்துகோரளவின் வீடு, வாகனம் மற்றும் அவரும் உயிரிழந்துள்ளார்.

சம்பத் அத்துகோரளவின் வீடு

ஜானக திஸ்ஸகுட்டியாராச்சியின் வீடு

யூ.கே. சுமித் உடுகும்புரவின் இரு வீடுகள், ஒரு வாகனங்களுக்கு தீ மற்றும் ஒரு வாகனம் சேதம்

அகில சாலிய எல்லாவலவின் வீடு, அலுவலகம் மற்றும் 2 வாகனங்கள்

லலித் எல்லாவலவின் அலுவலகம்

ஜகத் குமார சுமித்ரா ஆராச்சியின் அலுவலகம்

நாலக கோட்டேகொடவின் வீடு, அலுவலகம் அரச வாகனம் உள்ளிட்ட 3 வாகனங்கள்

கோகிலா குணரத்னவின் வீடு, சகோதரரின்வீடு மற்றும் இரு வாகனங்கள்

மிலான் ஜயதிலக்கவின் வீடு, வாகனம் மற்றும் 5 மோட்டார் சைக்கிள்கள்

இசுரு தொடாங்கொடவின் தாய்க்கு சொந்தமான ஜீப்வண்டி

பிரேமானந்த டி தொலவத்தவின் வீடு

எம். நந்தசேனவின் வீடு

பியும் அத்ரப பஸ்குவல்லவின் மத்துகம வீடு

அமல் மாயாதுன்னவின் வீடு மற்றும் அலுவலகம்

நிபுண ரனவக்கவின் அலுவலகம்

அலி சப்ரியின் இரு வீடுகள், அலுவலகம், கெப் வாகனம், 8 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வியாபார நிலையம்

அஜித் ராஜபக்ஷவின் பஸ்

குணதிலக்க ராஜபக்ஷவின் அலுவலகம்

உபுல் மனேந்திர ராஜபக்ஷவின் வீடு

ராசிகா விக்ரமசிங்கவின் வீடு

யஹத் பிரதீப் விதானவின் வீடு

டி. வீரசிங்கவின் வீடு மற்றும் மோட்டார் சைக்கிள்

சமன்பிரிய ஹேரத்தின் வீடு, அலுவலகம் மற்றும் வாகனம்

லலித் வர்ணகுமார மஞ்சுவின் வீடு மற்றும் அலுவலகம்

சந்திம வீரக்கொடியின் வீடு மற்றும் அலுவலகம்

நிமல் லான்சாவின் வீடு மற்றும் வாகன விற்பனை நிலையம்

பியங்கர ஜயரத்னவின் வீடு என்பனவே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளதுடன், தீ வைத்தும் எரிக்கப்பட்டுள்ளது.

## மின்வெட்டு...

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் உள்ள அனைத்து டீசல் மற்றும் எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்களும் தற்போது செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெஸ்கோஸ் அனல்மின் நிலையம் மற்றும் களனிதிஸ்ஸவில் அமைந்துள்ள இரண்டு மின் உற்பத்தி நிலையங்களும் இறுதிவரை இயங்கி வந்த போதிலும், தற்போது அவையும் செயலிழந்திருப்பதாக சங்கத்தின் தலைவர் அனில் இதுவரகே தெரிவித்தார்.

இதேவேளை, நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் உள்ளக எரிபொருள் கசிவு காரணமாக குறித்த மின் நிலையமும் செயலிழந்துள்ளதால், அதனை சரிசெய்வதற்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்கள்செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால், நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் பிரச்சினை தொடரும் பட்சத்திலும் மழை வீழ்ச்சி கிடைக்காத பட்சத்திலும் அமுலிலுள்ள மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணில் அரசுக்கு ஆதரவு...

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகியதையடுத்து, அவ்விடத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். எனினும், அவருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து அரசாங்கத்தை அமைப்பதற்கான நெருக்கடி இருக்கும் நிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி சுயாதீனமாகவுள்ளவர்களை தவிர தற்போது அரசாங்கத்திலிருக்கும் அனைவரும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளதோடு, ஏனைய கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றார்.

நாளைய தினம் நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில், புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளும் வகையில், சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 10 சுயாதீன குழுவுடனும் நேற்று (15) பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில், ஏற்கனவே மத்திய செயற்குழுவின் போது, புதிய பிரதமருக்கு ஆதரவளிக்க முடியாது எனக் கூறியிருந்து சுதந்திரக் கட்சி, நேற்று (15) கூடிய நாடாளுமன்றக்குழு கூட்டத்திற்கு பின்னர் புதிய பிரதமரின் கீழ் அரசாங்கத்தை அமைப்பதற்கு முழு ஆதரவை வழங்குவதாக அவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதனால், நாளை கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வின் போது, அரசாங்கத்தை அமைப்பதற்கான பெரும்பான்மையை காட்டுவதோடு, ஏனைய கட்சிகளின் ஆதரவையும் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க பெற்றுக்கொள்வார் எனவும் கூறப்படுகின்றது.

அதேபோன்று, நாளை நாடாளுமன்ற அமர்வுக்கு பின்னர் புதிய அமைச்சரவையையும் நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. இதன்போது, நாடாளுமன்றத்தில் ஆதரவளிக்கும் கட்சிகளுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றன.

## டீசல் தாங்கிய கப்பல்...

டொம் எல்வின் நிறுவனத்தின் ஊடாக குறித்த டீசல் தொகை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ட்விட்டர் பதிவொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இதுவரையில் 400,000 மெற்றிக் தொன் எரிபொருள் இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

## பாதுகாப்பை...

சமூக ஊடகங்கள் வாயிலாக நபர்களை வன்முறைகளில் ஈடுபடுவதற்காகவும் பல குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கும் தூண்டி வருவதாக புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

இதனால், தேவையற்ற வகையில் நபர்கள் ஒன்று கூடுவதை தடுக்க வேண்டும் என பொலிஸ் மா அதிபர் தனது சுற்றறிக்கையில் கூறியுள்ளார்.

ஒன்றுகூடி மேற்கொள்ளும் வன்முறை செயல்கள், குற்றங்களை தடுக்க உச்சப்பட்ச நடவடிக்கைகளை எடுக்குமாறும் தேவையான சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தும் ஆலோசனையையும் நடைமுறைப்படுத்தி, குற்றங்கள் மற்றும் வன்முறைகளை தடுக்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் இந்த உத்தரவு சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்கள், மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகள் உட்பட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வன்முறைச் சம்பவங்களுடன்...

கடந்த சில நாட்களாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களில் 68 பேர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நேற்று (15) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த சில நாட்களாக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 230 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் மேல் மாகாணத்தில் 71 பேரும் தெற்கு மாகாணத்தில் 43 பேரும் மத்திய மாகாணத்தில் 17, வடமேல் மாகாணத்தில் 36 பேரும், வட மத்திய மாகாணத்தில் 47 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 13 பேரும், ஊவா மாகாணத்தில் இருவரும், வடமாகாணத்தில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கிழக்கு மாகாணத்தில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இதுவரை சந்தேகத்தின் பெயரில் 230 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, அந்தந்த மாகாணங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். அந்தந்த பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளின் தலையீட்டில் இந்த விசாரணைகள் மற்றும் கைதுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களில் 68 பேர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் – என்றார்.

## உண்டியல் முறையில்...

கைது செய்யப்பட்ட இருவரிடமும் 47,000 அமெரிக்க டொலர் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி ஒரு கோடியே 71 இலட்சம் ரூபாவாகும் என விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் கிருலப்பனை சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

உண்டியல் முறையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நாணய பரிமாற்றம் இடம்பெற்று வருவதாகவும் எதிர்காலத்தில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் போராளிகளின்...

இந்த நிலையில் குறித்த தகவல் குறித்து, இந்திய புலனாய்வு பிரிவினர், விசாரணை மேற்கொண்டு இலங்கைக்கு அறிவிப்பார்கள் என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் படையினருக்குக் கிடைத்த தகவல்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தகவல்களும் உரிய முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

அதேநேரம், பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## 21 ஆவது திருத்தம்...

பிரதமர் ரணில் விக்ரமசிங்க கலந்துரையாடியதையடுத்து, அது குறித்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் படி சுகாதாரத்துறை, உணவு மற்றும் உரம் போன்ற பிரச்சினைகளுக்கு மேலும் நிதியுதவி வழங்குவதற்கு உறுதியளித்தனர். இந்த நிதியுதவி மேலும் அதிகரிக்கும். குறிப்பாக, பொருளாதாரத்திற்காக மேலும் நிதியுதவிகளை வழங்குவார்கள்.

இலங்கைக்குநிதியுதவி வழங்குவது தொடர்பாக இதற்கு முன்னர் பேச்சுவார்த்தை நடத்திய பல நாடுகளும் தற்போது அந்த நிதியுதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

எனினும், அடுத்த வாரத்தில் வலுசக்திக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதே எங்களுக்கான முக்கிய தேவையாகவுள்ளது. வங்கிகளில் டொலர் தட்டுப்பாடு இருப்பதால், நாங்கள் வேறு வழியில் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

அதேபோன்று, 21 ஆவது திருத்தம் குறித்து இன்று பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான மாதிரி வரைபை தயாரிப்பதற்கான நடவடிக்கைள் ஆரம்பிக்கப்படும். மேலும், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் குறித்தான மதிப்பீடுகள் முடிவடைந்துள்ளன. எனவே, இன்று அது தொடர்பான அறிக்கையையும் வெளியிடவுள்ளேன் - என்றார்.

## கட்சியின் முடிவையும்...

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் யோசனை முன்வைத்ததாகவும் அதற்கு கட்சி இணங்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், கட்சியின் முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய முக்கியமான தருணத்தில் கட்சி, நிற பேதங்களை ஒதுக்கி வைத்து விட்டு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு எனவும் தசநாயக்க மேலும் கூறியுள்ளார். சாமர சம்பத் தசநாயக்க, ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷவின் தாயார்...

ராஜபக்ஷ சகோதரர்களின் தாய் உயிருடன் இருந்திருந்தால், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிய விதம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மன்னித்திருக்க மாட்டார் என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். ராஜபக்ஷக்களின் தாயின் சகோதரியின் புதல்வரான அவர், இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனை கூறியுள்ளார்.

எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் நான் நாட்டில் இருந்து தப்பிச் செல்ல மாட்டேன், இதற்கு முன்னர் சுமார் 7 ஆண்டுகள் வெளிநாட்டில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அந்த பாத்திரத்தை மீண்டும் நடிக்க தயாரில்லை. மக்கள் ஏகோபித்த ஆதரவை வைத்துக்கொண்டு, நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக வந்தவர்கள், ஏன் ஏற்கனவே நாடு இருந்த இடத்தில் இருந்து நாட்டை அதலபாதாளத்திற்குள் தள்ள ஆரம்பித்தார்கள் என்பது எனக்கு கேள்விக்குறியாக இருக்கின்றது.

இதனை எனது அண்ணன் கோட்டாபய மாத்திரம் செய்திருந்தால், நான் அவரிடம் கேட்டிருப்பேன். எனினும் அண்ணனின் தலைமையின் கீழ் அவரை சுற்றியிருக்கும் அடிவருடிகள் காரணமாக சில விடயங்கள் தேவையான வகையில் நடக்கவில்லை.

ஜனாதிபதியோ, அமைச்சர்களோ தீர்மானங்களை எடுக்கும் போது, அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க ஆலோசகர்கள் இருக்கின்றனர். இன்னும் எதுவும் முடிந்து விடவில்லை. இந்த நாட்டை மீட்டெடுக்க முடியும். இதனை ஒவ்வொருவருக்கு தேவையான வகையில் செய்ய முடியாது.

நாட்டில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய சரியான முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுக்க வேண்டும்.

நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பில் இரண்டு மாதங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை வழங்கினர். முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலாப் பயணிகள் வந்து நாளொன்றுக்கு செலவு செய்யும் பணத்தை விட நான்கு மடங்கு அதிகமான விபரங்களை புள்ளிவிபரங்களில் வழங்கினர்.

முதல் இரண்டு மாதங்களில் 587 மில்லியன் சம்பாதித்ததாக கூறுகின்றனர். அதில் ஐந்தில் ஒரு பங்கே நாட்டுக்கு வருமானமாக கிடைத்துள்ளது, அந்த இடத்தில் ஜனாதிபதியை ஏமாற்றியுள்ளனர். சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்டவன் என்ற காரணத்தினால், இந்த உதாரணத்தை கூறினேன்.

ஒரு அதிகாரியை பதவி நீக்குமாறு ஜனாதிபதியிடம் கூறிய போது, தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் என்னை சிறையிலடைக்கப் போவதாக கூறினார். மீண்டும் நான் சிறைக்கு செல்வது நடக்கலாம் அல்லது நடக்காமலும் இருக்கலாம். வெள்ளை வான் வரலாம் அவை எல்லாம் பிரச்சினைகள் அல்ல.

ஜனாதிபதி எனது அண்ணன் என்னை திட்டினார். எங்கள் குடும்பத்தில் திட்டிப் பேசிக்கொள்வது சாதாரண விடயம். நான் பாடசாலையில் முதலாம் ஆண்டு படிக்கும் காலத்தில் இருந்தே குடும்பத்தினருடன் வளர்ந்தவன். இதனால், எங்களை திட்டுவது சாதாரணமான விடயம்.

மஹிந்த அண்ணன் என்னை திட்டவில்லை என்றால், நான் ஏதோ ஒன்று குறைந்து விட்டது போல் உணர்வேன். அன்பு காரணமாக திட்டுவார். சாதாரணமாக அண்ணன் கோட்டாபய திட்டும் போது அது அன்பாக இருக்காது. ஒரு அச்சுறுத்தல் போல் இருக்கும்.

மற்றவர்களுக்கு எப்படி என்று தெரியாது என்னை திட்டும் போது அப்படித்தான் இருக்கும். வெள்ளை வான் எனக்கு அனுப்பப்படலாம், அனுப்பப்படாமலும் இருக்கலாம் தற்போது அது எனக்கு பிரச்சினையல்ல.

பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை இந்த விதத்தில் பதவியிலிருந்து நீக்கியது தவறு. அலரி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டம் நடக்கும் போது நான் அங்கு இருந்தேன். நான் பிரதமருடன் இருந்தேன், அங்கு பலர் இருந்தனர்.

ஆனால், அங்கு வன்முறையை தூண்டி விடும் வகையில் பேசினர் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். அலரி மாளிகையில் நடந்த கூட்டத்திற்கு வந்த மக்களை காலிமுகத்திடலுக்கு அனுப்பும் எந்த தயார் நிலைகளும் இருக்கவில்லை.

அங்கு போகுமாறும் கூறவில்லை. ஆனால், மக்கள் சென்றனர். அதுதான் தேடி அறிய வேண்டிய பிரச்சினை. எங்கிருந்து மக்களுக்கு இந்த உந்து சக்தி கிடைத்தது. பிரதமருக்கு ஆதரவானவர்கள் தூண்டி விடும் எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை என்பது எனக்கு உறுதியாக தெரியும்.

ஜோன்ஸ்டன், சனத் நிஷாந்த போன்றவர்கள் பற்றியே கூறுகின்றேன். காலிமுகத்திடலுக்கு செல்லுமாறு அவர்கள் மக்களை தூண்டவில்லை. நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் இறுதி வரை இருந்தேன் என்பது பற்றி எனக்கு எந்த அச்சமும் இல்லை.

இதற்கு முன்னர் நானும் எனது மனைவி மற்றும் பிள்ளைகள் சுமார் 5 ஆண்டுகளாக இப்படியான அச்சத்தில் இருந்தோம். இதனால், புதிதாக அச்சம் கொள்ளத் தேவையில்லை.

வீடுகளையும் சொத்துகளையும் தீ மூட்ட ஏன் இடமளித்தனர் என நான் கேட்கின்றேன். மிரிஹான சம்பவத்தின் பின்னர் சில மாதங்கள் இப்படியான எதிர்ப்புகள் இருந்து வந்தன. நாட்டில் தற்போது யுத்தம் இல்லை, அமைதியான போராட்டங்களை நடத்துவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

ஏன் இந்தப் போராட்டங்கள் நின்று விடாமல் தொடர்ந்ததும் நடந்து வருகின்றன என்ற கேள்வி, ஜனாதிபதிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இருக்கின்றது. எனக்கு தெரியும் ஜனாதிபதி சம்பவங்களை தடுத்து நிறுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

ஆனால், அந்த ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலைக்கு சென்ற பின்னர் நான் அவரை தொடர்புகொண்டு தகவல்களை வழங்கி வந்தேன்.

அவருக்கு தகவல்களை வழங்க வேண்டியது கட்டாயம். யுத்தம் ஒன்று நடந்த நாட்டில் பாதுகாப்பு தொடர்பான அனுபவமிக்க தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இருக்கும் போது, பஸ் மீது தீ வைத்தவர்கள் மற்றும் பொல்லுகளை எடுத்து வந்தவர்களை தடுக்காமல் விட்டமைக்கான காரணம் இருக்கின்றது.

உதாரணமாக ஒருவரிடம் ஒரு வீட்டின் மீது தீ வைக்குமாறு கூறினால், அவர் அதனை செய்வார். என்னிடம் அப்படியான பொறுப்பை ஒப்படைத்தால், அதனை செய்ய வேண்டியது எனது கடமை. ஏன் தண்ணீர் ஊற்றவில்லை என என்னிடம் கேட்க கூடாது. தண்ணீரை ஊற்றுவது தீயை அணைக்க வேண்டியவர்களின் வேலை. தீ வைப்பது எனது வேலை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக முடியும், ஏன் இவை பேச்சுவார்த்தைகள் மூலம் நடக்காது இப்படி நடந்தன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான தொடர்பு பாலத்திற்கு நடுவில் வேறு நபர்கள் வரும் போது அந்த பாலம் பலமாக இருக்காது.

இரண்டு அணிகள் இருக்கின்றன. வியத்மக அணி மற்றும் எமது பொதுஜன பெரமுனவின் அணி. பொதுஜன பெரமுனவின் அணி பெசில் ராஜபக்ஷவின் அணி என்று கூற முடியாது. அது தற்போது பெரிய கட்சி. பெசில் ராஜபக்ஷ அதன் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் கட்சியை வளர்த்தெடுத்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தியது வியத்மக மற்றும் பொதுஜன பெரமுன. பொதுஜன பெரமுனவினர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடுகளை கொண்டவர்கள், இவர்களின் நிலைப்பாடுகள் வியத்மகவின் கொள்கைகளுடன் சில இடங்களில் ஒத்துப்போகாது.

இதன் காரணமாக சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. மஹிந்த ராஜபக்ஷ காரணமாகவே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவி வந்தார். பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்த முழு வாக்குகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்காக கிடைத்த வாக்குகள். அந்த கட்சி மஹிந்த ராஜபக்ஷவுக்காக உருவாக்கப்பட்டது.

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தை பயன்படுத்தியே வென்றதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறினர். ஜனாதிபதியின் புகைப்படத்தை பயன்படுத்தி அவர்கள் வெல்லவில்லை. அப்படியானால், மஹிந்த ராஜபக்ஷவே அரசியல் ரீதியான பலம்.

இதனால், வியத்மகவுக்கு தேவையான வகையில் மஹிந்தவை நீக்கியதை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். ராஜபக்ஷவினரின் தாய் உயிருடன் இருந்தால், மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து நீக்கப்பட்ட விதம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவை மன்னித்திருக்க மாட்டார்.

அவர் மாத்திரமல்ல எனது தாய், ஜனாதிபதியின் சின்னம்மா, அவரை தூக்கி வளர்த்தவர். மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்கிய விதத்தை அவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள்.

ஜனாதிபதியுடன் இருக்கும் அணியினரே மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கும் வகையில் செயற்பட்டனர். அந்த விடயத்தில் ஜனாதிபதி எடுத்த தீர்மானம் தொடர்பிலும் ஒரு சிக்கல் இருக்கின்றது.

இப்படியான தீர்மானங்களை எடுக்கும் போது ஜனாதிபதி அரசியல் சார்ந்த நபர்களிடம் ஆலோசனைகளை பெற்றிருக்க வேண்டும். பசளை தொடர்பாக ஜனாதிபதி எடுத்த முடிவு தவறானது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஜனாதிபதி விவசாயத்துடன் சம்பந்தப்பட்டவர் அல்ல. சமல் அண்ணன் அதில் சம்பந்தப்பட்டவர், அவர் அது சம்பந்தமான தீர்மானத்தை எடுத்திருந்தால், தவறாக மாற்றியிருக்காது.

கோட்டாபய ராஜபக்ஷ ஒரு இராணுவ அதிகாரியாக, போரை வென்றவர் என்ற வகையில் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் திறமையானவர். ஏன் அவரால், பஸ்கள் எரியூட்டப்படுவதை நிறுத்த முடியாமல் போனது.

பிரச்சினைகளை தடுத்து நிறுத்தாது அதனை அதிகரிக்கச் செய்தனர் என்றே எமக்கு எண்ணத் தோன்றுகிறது. ஜனாதிபதி பதவி விலகுமாறு கோரியதால், பிரதமர் பதவி விலக நேரிட்டது.

ஏன் பிரதமர் பதவி விலக வேண்டும். பிரதமர் காரணமாகவே பொதுஜன பெரமுனவுக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் வாக்குகள் கிடைத்தன. இலங்கையின் நிலைப்பாடு என்பது காலிமுகத்திடலில் இருப்பவர்களோ, முகநூலில் இருப்பவர்களோ அல்ல.

சிலர் இவர்களே இலங்கையின் முழு ஜன சமூகம் என கருதுகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ மீதுள்ள நம்பிக்கை காரணமாக வாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி நம்பிக்கை இருக்குமாயின் இரண்டு ஆண்டுகள் மக்கள் வெளியேறுமாறு கூறுவார்களா ?.

மஹிந்த ராஜபக்ஷ வெறுப்படைந்துள்ளார். தாய், தந்தையின் கல்லறைகளை பாதுகாக்க முடியாதவர், எங்களை பாதுகாப்பாரா ?. மெதமுலன வீடும் அழியவில்லை, கால்ட்டன் வீடும் அழியவில்லை. மெதமுலனவில் எனது இன்னுமொரு அண்ணனின் வீடே தீயிடப்பட்டது. ஜனாதிபதி, பிரதமர் உட்பட முழுமையான அரசாங்கத்தின் அதிகாரம் கையில் இருக்கும் போது தமது தாய், தந்தையின் கல்லறைகளை பாதுகாக்க முடியாவிட்டால், தான் வழங்கிய உத்தரவுகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவில்லை என்றால், ஜனாதிபதி இவை பற்றி கண்டறியாது, மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

வியத்மக மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய தரப்பே ஒன்றாக ஒரு மேசையில் அமர்ந்து ஒற்றுமையாக சாப்பிட்ட சகோதரர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தினர்.

ராஜபக்ஷவினரின் அரசியல் இத்தோடு முடிந்து விடுமா என்று கூற முடியாது.

அமெரிக்கா சார்பான அணி ஒன்று உருவானமை மற்றும் அமெரிக்காவுடன் பெரிய தொடர்புகள் இல்லாத அணி உருவானமை ஆகியனவே இவற்றுக்கு காரணம்.

இந்த அணிகளுக்கு இடையிலேயே இந்த மோதல் காணப்படுகிறது. நாட்டு மக்களுக்கு ராஜபக்ஷவினர் மீது வெறுப்பு ஏற்பட காரணமாக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. காலிமுகத்திடலில் யாருடைய பெயரை கூறுகின்றனர்.

தமது தாய், தந்தையின் கல்லறைகளை பாதுகாக்க முடியாது போனமை குறித்து மஹிந்த ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டியதில்லை. வெள்ளை வான் எங்கெல்லாம் அனுப்பி வைக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது, ஆனால் சில விடயங்கள் பற்றி எனக்கு தெரியும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஒன்றாக இருக்க பொருத்தமானவர்கள். இவர்கள் இருவருக்கும் குரோதமும் விரோதமும் அதிகம்.

துறைமுகத்தில் கொள்கலன் பெட்டியில் இருக்கும் எனது பிள்ளைகளின் கல்வி ஆவணங்களை சில நேரம் ரணில் விக்ரமசிங்க விடுத்துக்கொள்ள உதவலாம். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கோட்டாபய ராஜபக்ஷ அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவைவிட ரணில் சிறந்தவர். கோட்டாபய ஆத்திரமடையக் கூடியவர். அதிகமாக கோபப்படுபவர்.

மிக் விமான கொடுக்கல், வாங்கல் தொடர்பான கோப்புகள் மீண்டும் திறக்கப்படுவதை நான் விரும்புகிறேன்.

மிக் விமான கொடுக்கல், வாங்கல்கள் கோப்புகள் தொடர்பில் நாட்டின் நீதிமன்றங்களில் முக்கியமான உண்மைகள் பேசப்படுவதில்லை.

மிக் விமானங்களை கொள்வனவு செய்ய அனுமதி, வழங்கியது அதில் கையெழுத்திட்டது உதயங்க வீரதுங்க அல்ல. அனுமதி வழங்கியது கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை விலை மனு குழுவில் 23 பேர் இருக்கின்றனர் எனவும் உதயங்க வீரதுங்க கூறியுள்ளார்.

# ரணில் தலைமையிலான அமைச்சரவையில் பதவிகளை ஏற்காதிருக்க மலையக மக்கள் முன்னணி தீர்மானம்






(க.கிஷாந்தன்)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளடங்கலான புதிய அரசில் இணைந்து, எவ்வித பதவிகளையும் ஏற்காதிருக்க மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

அரசில் இணையுமாறும், அமைச்சுப் பதவியை ஏற்குமாறும் மலையக மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இவ்விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து முடிவொன்றை எடுப்பதற்காக முன்னணியின் மத்திய குழுக் கூட்டம், ஹட்டனிலுள்ள கட்சி தலைமையகத்தில் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நேற்று (15) நடைபெற்றது.

மத்திய மற்றும் செயற்குழு உறுப்பினர்களிடம், சமகால அரசியல் நிலைவரம் மற்றும் தற்போது கட்சி கையாளவேண்டிய நகர்வுகள் சம்பந்தமாக கருத்துகள் பெறப்பட்டன. இவ்வாறு கருத்துகள் பெறப்பட்ட பின்னர், தமிழ் முற்போக்கு கூட்டணியாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும் எனவும், புதிய அரசில் எவ்வித பதவிகளையும் ஏற்கக்கூடாதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியால் எடுக்கப்பட்ட இந்த முடிவு முன்னணியின் தலைவரால் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

"நாட்டு மக்களுக்கு எவ்வித தடையுமின்றி எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசிய சேவைகள் வழங்கப்பட வேண்டும். பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். இதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

மேலும், இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் வன்முறையில் ஈடுபட்ட அனைவரையும் உடனடியாக கைதுசெய்து முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். அகிம்சை போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்க திட்டமிட்ட அனைவரையும் அவர்களுடைய தனிப்பட்ட தகுதி தராதரம் பார்க்காது கைதுசெய்து சட்டத்தின் முன் கொண்டுசெல்ல வேண்டும்.

ஜனநாயகத்திற்காகவும் உண்மையை வெளிக் கொண்டு வருவதற்காகவும் போராடிய ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பிரதமர், ஜனாதிபதிக்கு ஆவணம் செய்து பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உடனடியாக விசேட வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டும்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வேண்டும். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதி முறைமையை ஒழிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலிஸாரை தாக்கியவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவதும் ஆனால், அகிம்சை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாக்கியவர்கள் இன்னும் சுதந்திரமாகவும், வெளியில் உலா வருவதும் ஒரு சட்டம் ஒரு நாடு கேள்விக் குறியாக்கியுள்ளது. எனவே, சட்டத்தை அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

ராஜபக்ஷ குடும்பத்தால் கொள்ளையிடப்பட்ட மக்கள் பணத்தை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல், ஊழல்வாதிகளுக்கு எதிராக உரிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்களும் இதன்போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன - என்றார்.



வைகாசி விசாக பௌணர்மி தினத்தை முன்னிட்டு உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், யாகம் வளர்த்தல் நேற்று (15) இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது. இதன்போது பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனின் அருளைப் பெற்றுக்கொண்டனர். (படங்கள் - உடப்பு நிருபர்)

# அம்பாறையில் நிலவும் வரட்சியினால் 5,426 குடும்பங்கள் பாதிப்பு

(நிந்தவூர் செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் வரட்சியினால் 5 ஆயிரத்து 426 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 635 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.ஸி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்கு அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் வரட்சியினால் கூடுதலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வரட்சியனால் கால்நடைகள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும், சம்பந்தப்பட்ட பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் தகவல்களை வழங்கும் பட்சத்தில் கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 754 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 201 பேரும், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 189 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 988 பேரும், லகுகல பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேரும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 457 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 350 பேரும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினூடாக குடிநீர் பௌசர்கள் மூலம் தொடர்ச்சியாக குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும், மேலதிகமாக குடிநீர் தேவைப்படும் பட்சத்தில் அவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அம்பாறை மாவட்ட அனர்த்த மத்திய நிலைய உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.




புனித வெசாக் தினத்தை முன்னிட்டு வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டபோது சிறைக்கு வெளியில் வந்த கைதியொருவர் பொலிஸ் உத்தியோகத்தருடன் அலவுளாவுவதை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு சமன் அபேசிறிவர்தன)

# பூண்டுலோயா - நுவரெலியா வீதி தாழிறக்கம்



(பூண்டுலோயா செய்தியாளர்)

பூண்டுலோயாவிலிருந்து நுவரெலியா செல்லும் பிரதான பாதை நேற்று தாழிறங்கியுள்ளது.

மத்திய மலைநாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக பல இடங்களில் பல இடர்கள் ஏற்பட்டுள்ளன. பூண்டுலோயாவிலிருந்து நுவரெலியா செல்லும் பாதை தாழிறங்கியுள்ளது.

இப்பாதையின் ஊடாக நுவரெலியா செல்லும் பொதுமக்கள் தவிர, டன்சினன் தோட்டத்திற்கு செல்லும் மக்களும் இப்பாதையையே பயன்படுத்தி வருகின்றனர். இப்பாதை இவ்வாறு தாழிறங்கியுள்ளமையால் இப்பாதையினூடாக செல்பவர்கள் மிக அவதானமாக செல்லுமாறு குறித்த பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதிக விபத்துகள், உயிரிழப்புகள் இப்பாதையின் ஊடாக ஏற்பட்டுள்ளன. எனவே, இப்பாதையின் ஊடாக செல்பவர்களை அவதானமாக செல்லுமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மட்டு. வைத்தியசாலையில் கொள்ளையிட்ட சந்தேக நபருக்கு 27 வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வந்தவர்களின் கையடக்கத் தொலைபேசி மற்றும் பணப்பை என்பவற்றை கொள்ளையடித்து வந்துள்ள சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் நேற்று முன்தினம் சனிக்கிழமை (14) உத்தரவிட்டார்.

குறித்த வைத்தியசாலையில் 22ஆவது விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த இருவரின் கையடக்கத் தொலைபேசி இரண்டு திருட்டு போயுள்ளதையடுத்து அங்கு இரவில் சென்று வந்த இளைஞர் ஒருவர் மீது சந்தேகம்கொண்டு அது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் குறித்த இளைஞனை கடந்த வெள்ளிக்கிழமை (13) கைதுசெய்து மட்டு தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன்போது ஏறாவூர் தர்காநகர் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய இவர், உறவினரொருவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து வைத்தியம் பெறுவதாகவும் அவருக்கு உதவிக்கு இரவில் நிற்கவேண்டும் என தெரிவித்து வைத்தியசாலைக்குள் உட்சென்று அங்கு விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருபவர் ஒருவருக்கு உதவிக்கு நிற்பதாக தெரிவித்து விடுதியில் தங்கியிருப்போரை நோட்டமிடப்பட்ட பின்னர் அவர்களின் கைதொலைபேசிகள், (பேஸ்) கைப்பை என்பவற்றை கொள்ளையடித்து வந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதில் கைதுசெய்யப்பட்ட இளைஞனிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட 2 கையடக்கத் தொலைபேசிகள், பணம், தேசிய அடையாள அட்டை இரண்டு, வங்கியில் பணம் பெறும் ஏ.ரி.எம். இயந்திர அட்டை 9, இரண்டு சாரதி அனுமதிப்பத்திரம், 3 ஆயிரத்து 900 பணம் என்பனவற்றை மீட்டு அவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

# நுவரெலியா கோட்டா கோ கமவில் வெசாக் கொண்டாட்ட நிகழ்வுகள்



(செ.திவாகரன்)

அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர், யுவதிகளின் போராட்டம் நடைபெற்று வருகிறது. இப்போராட்டத்திற்கு ஆதரவாக நுவரெலியா - பதுளை வீதியில் பிரதான மத்திய சந்தைக்கு முன்பாக நுவரெலியாவில் உருவாக்கப்பட்ட கோட்டா கோ கமவில் மே மாதம் பௌர்ணமி தினம் புத்தரின் பிறப்பை நினைவுபடுத்தி வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டது.

சிறிய வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டும் பௌத்த கொடிகள் பறக்க விடப்பட்டும் "தன்சல்" நிலையங்கள் அமைக்கப்பட்டும் பக்தி கீதங்கள் ஒலிரவிடப்பட்டும் வெசாக் பண்டிகை முன்னெடுக்கப்பட்டது. இங்கு கூடியிருந்த பொதுமக்களுக்கு கோப்பி, தேநீர் மற்றும் உணவு பரிமாறப்பட்டு பல்வேறு நிகழ்வுகளுடன் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உடனடியாக பதவி விலகுமாறு வலியுறுத்தி காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கமவில் வெசாக் கொண்டாட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள இளைஞர்களை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# அநுராதபுர கலவரங்களுடன் தொடர்புடைய 13 பேருக்கு 19 வரை விளக்கமறியல்

அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் சிலரின் வீடுகள் மீது தாக்குதல் நடத்திவந்த சம்பவங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட அநுராதபுரம் நகரத்தைச் சேர்ந்த வர்த்தகரான சாகர பியதிலக்க, குருந்துகுளம் சுனீத தேரர் உள்ளிட்ட 13 பேர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் பிரதான நீதவான் மற்றும் மாவட்ட மேலதிக நீதவான் நாலக்க சஞ்சீவ ஜயசூரிய நேற்று (15) உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்ரசேன, செஹான் சேமசிங்க, துமிந்த திஸாநாயக்க, சன்ன ஜயசுமன உள்ளிட்ட சிலரின் வீடுகளுக்கு சேதத்தை ஏற்படுத்தி தீவைத்த 11 சம்பவங்கள் தொடர்பில் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் சிலர் கைதுசெய்யப்படவுள்ளனர்.



உடப்பு ஆண்டிமுனையில் அமைந்துள்ள நாவல் மரத்தடியில் குடிகொண்டிருக்கும் கன்னியம்மன் ஆலயத்தில் வைகாசி விசாக பௌர்ணமி பூஜைகள் நேற்று (15)இடம்பெற்றன. இதில் விசேட பூஜைகளும், அபிஷேகமும், அன்னதானமும் நடைபெற்றன. இதன்போது பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (படங்கள் - உடப்பு நிருபர்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 16ஆம் திகதி, திங்கட்கிழமை

# மீண்டும் புலிப் பூச்சாண்டியா?

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கும் இந்த வாரத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் முயற்சியென்ற பெயரில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய புலனாய்வுத்துறையை மேற்கோள் காட்டி 'தி ஹிந்து' பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

மீண்டும் ஒருங்கிணையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர், வெவ்வேறு நாடுகளிலிருந்து திட்டம் தீட்டி, இலங்கையில் மீண்டும் தாக்குதல்களைத் தொடுக்கத் தயாராகலாம் என இந்திய உளவுத்துறை தெரிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என உளவுத்துறை எச்சரித்துள்ளது.

அதற்காகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு பகுதியினர் கடலோர மாவட்டங்களின் வழியாக தமிழகத்தில் ஊடுருவியிருக்கலாம் என உளவுத்துறை சுட்டிக்காட்டியுள்ளது.

கடலுக்குச் செல்லும் தமிழக மீனவர்கள், கடல் பகுதியிலும் சர்வதேச கடல் எல்லையிலும் சந்தேகத்துக்குரிய நபர்கள் தென்பட்டால் கடலோர பாதுகாப்புப் படையினருக்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்களாக தமிழகத்தில் சந்தேகிக்கப்படுபவர்களின் நடமாட்டங்களையும் தீவிரமாக கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இலங்கையில் மீண்டும் தாக்குதல் நடத்தப்போவதாக வெளியான செய்திகளை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. மே 18ஆம் திகதி இலங்கையில் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக இந்திய உளவுத்துறையை மேற்கோள் காட்டி மே மாதம் 13ஆம் திகதி 'தி ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக உளவுத்துறை மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் அனைத்துத் தகவல்களும் முறையாக விசாரிக்கப்பட்டு படையினருக்குத் தெரிவிக்கும் அதேவேளை, பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறியே கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சியமைத்தது.

ஆயினும், இந்த விடயத்தை காரணங்காட்டி வடக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுப்பதற்கான முன்னாயத்தம் இடம்பெறுகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவினர்களுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். எனினும், விடுதலைப் புலிகள் மீள உருவாகிவிட்டதான தோரணையில் நினைவேந்தலுக்கு படைத்தரப்பால் தடைவிதிக்கப்படுகிறது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் தேசிய பாதுகாப்பு குறித்த விடயமே தேர்தல் காலங்களில் முக்கிய பேசுபொருளாக காணப்பட்டது. அதனைத் துரும்பாக பயன்படுத்திக்கொண்ட தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனவாதத்தை மிக இலகுவாக விதைத்தது.

அதற்காக திட்டமிட்ட வகையில் முஸ்லிம்களை ஒடுக்கும் செயற்பாடுகளும் அரங்கேறின. ஆட்சிக்கு வந்த பின்னர் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை பெற்றுக்கொடுப்பதாக தேர்தல் காலங்களிலும் அதற்குப் பின்னரும் உறுதியளிக்கப்பட்டது.

எனினும், இதுவரை தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவோ அல்லது ஆகக்குறைந்தது பிரதான சூத்திரதாரியை அடையாளங்காட்டப்படவோ இல்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மீண்டும் விடுதலைப் புலிகள் என்ற பேச்சு தலைதூக்கியுள்ளது.

ராஜபக்ஷக்களின் இருப்பு விடுதலைப் புலிகள் என்ற பெயரிலேயே கடந்த காலங்களில் தங்கியிருந்தது. சிங்கள மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் பெயரைக் கூறி போர் வெற்றியை கேடயமாக பயன்படுத்தி ராஜபக்ஷக்கள் வெற்றிநாயகர்களாக வலம் வந்தனர்.

மே மாத காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் பெரும்பாலான பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுவதால் படையினரின் பிரசன்னம் அதிகமாக காணப்படும். இந்நிலையில், 'மீண்டும் விடுதலைப் புலிகள்' என்ற பேச்சு பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படுவதற்கான காரணமாக அமையும் என்பது மறுப்பதற்கில்லை.

இதன் நிமித்தம் உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கு மறுப்பு அல்லது தடை விதிக்கப்படுமாயின் அதனை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.



# பாத்திரம் அறிந்து பிச்சையிடு!

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மட்டுமல்லாமல், அரசியல் குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. அவசரகால நிலை அறிவிக்கப்பட்டு, அரசுக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிகளை அடக்க இராணுவம் பணிக்கப்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து, புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நியமித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, உணவுப் பஞ்சம் ஆகியவற்றை தீர்த்துவைக்க, இந்திய அரசாங்கம் பெருமளவில் உதவிசெய்து வருகிறது. அங்கு ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சம், பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கிருந்து தமிழர்கள் பலரும் இந்தியாவுக்கு அகதிகளாக வரத் தொடங்கியுள்ளனர்.

இலங்கை அரசுக்கும், இலங்கை மக்களுக்கும் நாம் உதவுவது புதிதல்ல. வரலாற்றுக் காலந்தொட்டு இது நடைபெற்று வருகிறது. 750 ஆண்டுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர் பரராசசேகரன். அங்கு இருக்கின்ற மக்களுக்கு உதவும் வகையில் புகழேந்திப் புலவர் சடையப்ப வள்ளலிடம் பஞ்சம் குறித்த தகவல்களை தெரிவிக்கின்றார். சடையப்ப வள்ளல் தமிழகத்திலிருந்து ஈழத் தமிழர்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி உதவுகின்றார்.

தேனார் தொடையார் பர ராச சிங்கப்பெரு மான்

செந்தமிழுக்கு காணார் நெல்லின் மலைகோடி

கண்டி நாடு கரைசேரக் கூனார் கப்பல்
ஆயிரத்தில் கொடு போய் அளித்த
கொடைத் தடக்கை மானா கரன் சங்கரன்
உடையான் வளம்சேர் சோழ மண்டலமே
என்கிற சோழ மண்டல சதகப் பாடல் மூலம் இதனை அறியலாம்.

இதேபோல் இலங்கையில் அநுராதபுர மன்னன் தேவநம்பியதீசன் கேட்ட அனைத்தையும் கொடுத்தார் இந்தியாவை ஆண்ட அசோக சக்கரவர்த்தி. அசோகர் இலங்கை மக்களுக்குத் தேவைப்படும் மருந்துகளையும் உணவுகளையும் இலங்கைக்கு அனுப்பிவைத்ததை தனது ஆட்சியின் 13ஆவது ஆண்டில் இரண்டாவது கல்வெட்டில் பதித்துள்ளார்.

இலங்கைக்கு பல்வேறு சமயங்களில் இந்திய அரசாங்கம் உதவிசெய்து வந்துள்ளது. 1971 ஏப்ரலில் இலங்கையில் சிங்கள புரட்சிகர இளைஞர் அமைப்பு இலங்கை அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தது. அப்போதைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம் உதவி கேட்டார். உடனே இந்தியப் படை அங்கே சென்று கிளர்ச்சியாளர்களை அடக்கி சிறிமாவோ அரசைக் காப்பாற்றியது.

2020 செப்டம்பரில் இலங்கைக்கு சொந்தமான எண்ணெய்க்கப்பல் ஒன்று கொழும்புக்கு அருகே தீப்பற்றி எரிந்தது. அப்போதும் இந்தியாவிடம் இலங்கை உதவி கோரியது. இந்திய கடலோர காவல்படை விரைந்து சென்று தீயை அணைத்து எண்ணெய்க் கப்பல் உடையாமல் காப்பாற்றி இலங்கையிடம் ஒப்படைத்தது.

1948 பெப்ரவரி 4 அன்று இலங்கை விடுதலை பெற்ற பிறகு இலங்கை அரசு கேட்டுக்கொண்டதால் இந்திய அரசாங்கம் செய்த உதவிகள் ஏராளம். ஆனால், இந்திய அரசாங்கமும், தமிழக மக்களும் செய்த உதவிகளுக்கு இந்தியாவுக்கோ தமிழக மக்களுக்கோ நன்றியுடைய அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறதா?



1971 டிசம்பரில் இந்தியா - பாகிஸ்தான் போர் நடைபெற்றபோது, பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்க விமானப் படைகளைப் பயன்படுத்துகிறது. அப்போது இந்தியாவுக்கு உதவியாக இலங்கை தன் படையை அனுப்பவில்லை; ஆதரவுக் குரல் கூட கொடுக்கவில்லை. மாறாக, பாகிஸ்தானுக்கு ஆதரவாக அந்நாட்டுப் படைகளுக்கு இலங்கை உதவியது. சிறிமாவோ அரசு, பாகிஸ்தான் விமானங்கள் எரிபொருள் நிரப்பிக்கொள்ள கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுமதி கொடுத்தது. அங்கிருந்து இந்தியாவைத் தாக்க பாகிஸ்தான் முற்பட்டது.

இதேபோல் இந்தியா - சீனா போரின் போதும் இலங்கை அரசாங்கம் சீனாவிற்குத்தான் ஆதரவாக நின்றது. சர்வதேச அரசியலிலும் இலங்கை அரசாங்கம் எப்பொழுதும் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாடுகளையே மேற்கொண்டு வருகிறது. ஆனால், இலங்கை தமிழ் மக்கள் எப்பொழுதும் இந்தியாவை ஆதரித்தே வந்துள்ளனர்.

2014 ஒக்டோபரில் தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு கொழும்பு நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்தது. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க "இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்வோம்" என்று ஆவேசமாகப் பேசினார். சிங்கள கடற்படையின் அட்டூழியங்கள் இன்றும் தொடர்கின்றன. இந்திய மீனவர்கள், அதாவது தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும், கொல்லப்படுவதும் முடிவுக்கு வரவில்லை. இந்திய எல்லைக்குள் வந்து தீ வைப்பு உள்ளிட்ட காரியங்களில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டதும் வரலாறு.

1948 முதல் 1958 வரை பாக்கு நீரிணையிலும், மன்னார் வளைகுடாவிலும் காணப்பட்ட மீனவர்களின் படகுகளை, தோணிகளைக் கைப்பற்றி அவற்றில் இருந்த மீனவர்களை 'கள்ளத் தோணிகள்' எனக்கூறி கைதுசெய்து கொழும்பில் சித்திரவதை முகாமில் வைத்து விசாரணையின்றி கொடுமைப்படுத்தியது இலங்கை கடற்படை.

1960 முதல் 1970 வரை இலங்கையில் இந்திய மீனவர்களின் வள்ளங்களையும், தோணிகளையும் கடத்தல்காரர் கலங்கள் என கைப்பற்றியதோடு, மீனவர்களை கொழும்பு சித்திரவதை முகாமில் அடைத்து வைத்தனர். 1970 முதல் 2009 வரையிலான 40 ஆண்டுகாலத்தில் பாக்கு நீரிணையில் மன்னார் வளைகுடாவில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் உயிரிழந்தார்கள். ராமேஸ்வரத்தில் நுழைந்த இலங்கை கடற்படை மீனவர் குடிசைகளை எரித்தது உச்சகட்ட துரோகமாகும்.

இந்தியாவுடன் இலங்கை செய்துகொண்ட உடன்பாடுகளை எப்போதும் தனக்கு சாதகமாகவே இலங்கை பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்தியா, இலங்கையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களின்படி எப்பொழுதும் நடந்துகொள்ளும். ஆனால், இலங்கை, இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறித்தான் எப்போதும் செயல்பட்டிருக்கிறது.

1954 நேரு - கொத்தலாவலை ஒப்பந்தம், 1964 சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தம், 1974, 1976 கச்சதீவுக்கான இந்திரா காந்தி- சிறிமாவோ ஒப்பந்தம், 1987 ராஜீவ் காந்தி - ஜெயவர்தன ஒப்பந்தம் இவை அனைத்தையுமே இந்தியத் தரப்பு நிறைவேற்றியது. இலங்கையோ அந்த ஒப்பந்தத்திலுள்ள ஒரு ஷரத்தைக்கூட நிறைவேற்றவில்லை. ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்வதும், அதன் பிறகு ஒப்பந்தத்தை மீறுவதும் இலங்கை அரசாங்கத்திற்கு கைவந்த கலையாகும்.

1925 யாழ்ப்பாண மகேந்திரா ஒப்பந்தம், 1947 சோல்பரி ஒப்பந்தம், 1958 செல்வா ஒப்பந்தம், 1965 செல்வா - டட்லி ஒப்பந்தம் இவை அனைத்துமே இலங்கைத் தமிழர்களை இலங்கை அரசாங்கம் ஏமாற்றிய ஒப்பந்தங்கள். அந்த ஒப்பந்தங்களின்படி இலங்கை அரசு நடந்துகொள்ளவில்லை. இலங்கைத் தமிழர் தலைவர்கள் ஏமாந்தார்கள்.

இலங்கை 2015 ஒக்டோபரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட தீர்மானத்தை 2020இல் ஒப்புக்கொள்ள மறுத்தது. ஐ.நா. அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடம் கொடுத்த வாக்குறுதிகளையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை.

இந்தியா செய்த நன்மைகளை கருத்திற் கொள்ளாமல், இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் சீன தேசத்திற்கு ஆதரவாகவே இலங்கை நடந்துகொண்டு வருகிறது. இலங்கையில் சீனாவின் தளங்களை அமைத்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

அது மட்டுமல்ல, இலங்கையில் இந்திய எதிர்ப்புக் கொள்கைகளின் மூலமாகத்தான் சிங்கள அரசியல் கட்சிகள் வாக்காளர்களைக் கவர்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியர்களுக்கு எதிராக, தமிழர்களுக்கு எதிராக முழங்கினால் மட்டுமே இலங்கையில் சிங்களவர்களின் வாக்குகளைப் பெற முடியும் என இந்தியாவிடம் இலங்கை அரசியல்வாதிகள் கூறி வருகிறார்கள்.

இப்பொழுது இந்தியாவிடம் பஞ்சத்தைப் போக்க உணவு கேட்கிறார்கள்; எரிபொருள் தட்டுப்பாட்டைப் போக்க உதவி கேட்கிறார்கள்; கடன் சுமையிலிருந்து மீண்டு வர பண உதவி கேட்கிறார்கள்.

இந்நிலையில், நாம் இலங்கைக்கு எந்த வகையில் உதவ வேண்டும் என்பதை சிந்தித்துத்தான் செய்ய வேண்டும். பாத்திரம் அறிந்துதான் பிச்சையிட வேண்டும்.

இலங்கைத் தமிழருக்கு அரசியல் உரிமைகளையும், அதிகாரங்களையும் வழங்க வேண்டும். இதற்கான ஷரத்து 1987 ராஜீவ் காந்தி - ஜெயவர்தன ஒப்பந்தத்தில் உள்ளது. இந்த ஒப்பந்தத்தை இலங்கை நிறைவேற்ற இந்தியா வலியுறுத்த வேண்டும்.

ராஜீவ் காந்தி - ஜெயவர்தன ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு சாத்தியப்படும். தமிழர்களின் பகுதிகள் பாதுகாக்கப்படும். இந்தியாவில் மாநிலங்களுக்கு உள்ள உரிமைகள்போல் தமிழர்களுக்கான மாநில உரிமையும் கிடைத்துவிடும். இலங்கையில் 13ஆவது அட்டவணை சீர்திருத்தம் ஏற்படும். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஓரளவு சரியான தீர்வாக இது அமையும்.

அதேபோல் இந்திரா காந்தி - சிறிமாவோ செய்துகொண்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும். கச்சதீவில் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்த வேண்டும். இவற்றையெல்லாம் இந்தியப் பிரதமரும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரும் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும். இந்த முறையும் நாம் ஏமாந்துவிடக் கூடாது!

**• அர்ஜுன் சம்பத்**
***தலைவர், இந்து மக்கள் கட்சி***

## இன்றைய நாளில்...

- **1667 – யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வாக்கிய பஞ்சாங்கம் இராமலிங்க முனிவரால் வெளியிடப்பட்டது.**
- **1916 – யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வெசாக் பண்டிகை அங்குள்ள சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டது.**
- **1985 – தம்பிலுவில் படுகொலைகள்: இலங்கையின் தம்பிலுவில் கிராமத்தில் அடுத்த மூன்று நாட்களில் 63 வரையான தமிழ் இளைஞர்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டனர்.**
- **1991 – ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாம் எலிசபெத் மகாராணி அமெரிக்க சட்டமன்றத்தில் உரையாற்றிய முதலாவது பிரித்தானிய ஆட்சியாளர் என்ற பெருமையைப் பெற்றார்.**
- **1992 – எண்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்து பூமிக்குத் திரும்பியது.**
- **2005 – குவைத் பெண்களுக்கான வாக்குரிமையை வழங்கியது.**
- **2006 – தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகராகத் தகுதி உடையவராக அறிவிக்க மு. கருணாநிதி தலைமையிலான தமிழக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.**



# மே 18 முன்னாள் போராளிகள் தாக்குதல் முயற்சி

## 'த ஹிந்து' நாளிதழுக்கு சாணக்கியன் கடும் கண்டனம்!

'த ஹிந்து' நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.



இலங்கை கடும் பொருளாதார அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தாக்குதலை மேற்கொள்வதற்காக ஒன்றிணைகின்றனர் என 'த ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரமான வன்முறைப் போராட்டங்களுக்கு மத்தியில் இலங்கை இரண்டு முறை அவசரகால நிலைமையை அறிவித்துள்ளது.

இந்நிலையில், சர்வதேச தொடர்புகளைக் கொண்ட புலம்பெயர் தமிழர்களின் ஒரு பிரிவினர், போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்துவரும் மோதல்களில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்த முயல்வதாக தகவல் வட்டாரங்கள் தெரிவிப்பதாக குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18ஆம் திகதியை சில குழுக்கள் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அனுஷ்டித்து தாக்குதல்களை நடத்த திட்டமிடுவதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே குறித்த செய்தி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், அதனை தடுக்கும் வகையிலா இவ்வாறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இன்றைய காலத்தின் தேவை ரணில்; அவர் மீது எமக்கு நம்பிக்கை உண்டு!

## முன்னாள் எம்.பி. சதாசிவம் தெரிவிப்பு



(நுவரெலியா செய்தியாளர்)

இன்றைய நிலையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, அவர்களுடைய பிரச்சினைக்கு உடனடியாக ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். இன்றைய காலத்தின் தேவை ரணில் விக்ரமசிங்கவே - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நியமனம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.தொடர்ந்து இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் வரிசைகளில் நிற்பதை முடிவிற்கு கொண்டுவர வேண்டும். அவர்களுடைய பசி பட்டினியை இல்லாமல் செய்து ஓரளவிற்கு நிம்மதியாக வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். இதனை செய்யவேண்டுமாக இருந்தால் அரசியல் அனுபவமும் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவருமான ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக தெரிவுசெய்துள்ளமை மிகவும் பொருத்தமானது.

மேலும், இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டுமாக இருந்தால் எங்களுடைய நாட்டு பொருளாதாரத்தின் மூலமாக அதனை செய்ய முடியாது. வெளிநாட்டு உதவிகளைப் பெற வேண்டும். அந்த உதவிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய அனுபவம் மிக்கவர்தான் இந்தப் பிரதமர்.

பலர் பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம். அதற்கு ஆணைக்குழு அமைத்து அதனை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கலாம். ஆனால், மக்களுடைய பசியை தீர்க்க வேண்டும். எனவே, இந்த நேரத்தில் அனுபவமும் வெளிநாட்டு தொடர்புகளைக்கொண்ட ஒருவரை நியமிப்பதே சிறந்தது. அந்தவகையில் இந்த நியமனம் பொறுத்தமானது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் தீரமானங்களை எடுக்கவேண்டும்.

நாடு இன்று இருக்கின்ற நிலைமையில் பழைய கதைகளை பேசிக்கொண்டிருப்பதற்கான நேரம் இதுவல்ல. இன்றைய தேவை பொருளாதார வளர்ச்சி. அதனை யார் செய்கின்றார்களோ அவர்களுக்கு அனைவரும் ஒத்தழைப்பு வழங்க வேண்டும்.

இது எங்களுடைய தனிப்பட்ட அரசியலை முன்னெடுத்துச் செல்கின்ற நேரம் அல்ல. நாடும் மக்களும் ஆரோக்கியமாகவும் சுபீட்சமாகவும் இருந்தால் மாத்திரமே நாம் அரசியல் செய்ய முடியும்.

எனவே, எமது நாட்டின் எதிர்காலமும் எதிர்கால இளைஞர்களின் எதிர்காலமும் எதிர்கால அரசியலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடமே தங்கியுள்ளன. அதனை அவர் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கைதடியில் பதுக்கி வைக்கப்பட்ட மதுபானப் போத்தல்கள் மீட்பு



(சாவகச்சேரி செய்தியாளர்)


வெசாக் விடுமுறை தினத்தில் விற்பனை நோக்கில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்கள் மற்றும் பியர் ரின்களை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்டுள்ளனர்.

உதவி மதுவரி ஆணையாளர் ரொஷான் பெரேராவின் ஆலோசனைக்கமைவாக, சாவகச்சேரி மதுவரி பொறுப்பதிகாரி ஆ.ராஜ்மோகனின் வழிநடத்தலில் மதுவரி சார்ஜன்ட் மேஜர் மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் கைதடி பகுதியிலுள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்களை மீட்டிருந்தனர்.

இதன்போது 180 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 150 சாராயப் போத்தல்கள், 500 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 168 பியர் ரின்கள் ஆகியன மீட்கப்பட்டதுடன்-சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமையல் எரிவாயு இல்லாத காரணத்தால் சம்மாந்துறையில் ஹோட்டல்கள் மூடல்





(சம்மாந்துறை செய்தியாளர்)

சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு சம்மாந்துறை பிரதேச ஹோட்டல் உரிமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக ஹோட்டல்கள் பலவும் மூடப்பட்டுள்ளன.

ஹோட்டல்கள் கடந்த சில வாரங்களாக மூடப்பட்டுள்ளமையால் ஹோட்டல் உரிமையாளர்கள் வருமானத்தை இழந்துள்ளார்கள். அத்தோடு ஹோட்டல்களில் தொழில் புரிந்தவர்களும் தொழில் இல்லாத நிலைக்குள்ளாகியுள்ளார்கள்.

இதனால், ஹோட்டல் உரிமையாளர்களும், அங்கு தொழில் புரிந்தவர்களும் வாழ்வாதாரத்தை இழந்துள்ளர்கள்.

மேலும், சமையல் எரிவாயுவுடன் கோதுமை மா, பால்மா போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், அத்தகைய பொருட்களை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆதலால், ஹோட்டல்களுக்கு சமையல் எரிவாயு வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# தவறான பொருளாதாரக் கொள்கையே நாட்டின் டொலர் பிரச்சினைக்குக் காரணம்

## நீதிக்கான சேவையாளர் ஒன்றியம் தெரிவிப்பு




(கண்டி செய்தியாளர்)

நாட்டின் வளங்களை விற்பனை செய்தல் என்ற கொள்கையை புதிய பிரதமர் மாற்றியமைப்பார் என்ற நம்பிக்கை உண்டு, டொலர் பிரச்சினை அண்மையில் ஏற்பட்ட ஒன்றல்ல. அது நீண்டகால தவறான பொருளாதார செயற்பாட்டின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகுமென நீதிக்கான சேவையாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கண்டி டெவோன் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அவ்வமைப்பின் உபதலைவர் மஞ்சுல வீரகோன் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் நாட்டு வளங்கள் விற்கப்பட்டு வருவதாக பரவலாகப் பேசப்பட்டு வந்தது. அக்கொள்கை தற்போதைய புதிய பிரதமரால் மாற்றப்பட வேண்டும். அதிலிருந்து நாம் மீள வேண்டும். அதற்காக புதிய முதலீடுகளை கொண்டுவரும் முயற்சிகள் தேவை, டொலர் பிரச்சினை அண்மையில் ஏற்பட்ட ஒன்றல்ல. நீண்டகால தவறான பொருளாதார செயற்பாட்டின் விளைவாக இன்று அத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

டொலர் பிரச்சினைக்கான துரித தீர்வு சுற்றுலாத் துறையை உடன் முன்னேற்றுவதாகும். ஏனெனில், சுற்றுலாப் பயணிகள் விரும்பும் எந்தவொரு காலநிலையையும் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களில் இலங்கையில் பயணம் செய்து அடைந்துகொள்ள முடியும். இலங்கையின் இயற்கை காலநிலை அப்படியானது. கண்டியிலிருந்து 2 மணித்தியாலத்தில் நுவரெலியா சென்று ஐரோப்பிய நாடுகளின் காலநிலையை அடையலாம். மாறாக 2 மணித்தியாலத்தில் தம்புள்ளை சென்றால் வெப்ப வலயத்தை அடையலாம். மத்திய வெப்பமா? மித வெப்பமா? எதற்கும் தயார் நிலையில் இலங்கை உள்ளது. இந்த இயறகை வளத்தை நாம் பயன்படுத்தலாம்.

எமது நாட்டில் இல்லாத ஒன்றும் இல்லை. அனைத்தும் சர்வதேச அதி உயர்ந்த தரத்தில் இயற்கை தந்த வரப்பிரசாதமாக உள்ளது - என்றார்.

# ரணிலின் இராஜதந்திர முயற்சி வெற்றியளிக்குமாயின் பொருளாதார மீட்சி பெறுவதற்கு வெகுகாலம் எடுக்காது

## முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா நம்பிக்கை

(சாய்ந்தமருது செய்தியாளர்)

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேசத்தின் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்கும் இராஜதந்திர முயற்சிகள் வெற்றியளிக்குமாயின் எமது நாடு பொருளாதார மீட்சி பெறுவதற்கு வெகுகாலம் எடுக்காது - என முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்..

சமகால அரசியல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பாரிய இன்னல்களை எதிர்கொள்கின்றனர். இந்த பின்னணியில்தான் மக்கள் போராட்டம் உருவானது, அகிம்சை வழியில் போராடிய போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர், போராட்டக்காரர்களை தாக்கியதால் மக்கள் ஆத்திரத்தில் ஆளுந்தரப்பு எம்.பிக்கள், அமைச்சர்களின் வீடுகள், சொத்துகளை தேடித் தேடி தீ வைத்தனர், பல உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டன.

இத்தகைய அபாய சூழலில் அரசாங்கம் ஒன்று இல்லாத நிலை ஏற்பட்டது. உடனடியாக ஆட்சியை அமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு பல தடவைகள் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். இறுதிநேரம் வரை இருந்துவிட்டு தனது கட்சிக்காரர்கள் ஒருசிலரின் அழுத்தத்தின் பின்னணியில், அதுவும் ரணிலை நியமிக்க முடிவானதன் பின்னரே பல நிபந்தனைகளை முன்வைத்து, தான் பதவியேற்கப் போவதாக சஜித் அறிவித்தார். இது மிகவும் கோழைத்தனமான முடிவாகும்.

நாட்டில் இவ்வளவு பிரச்சினை உருவாகியும் எதிர்க்கட்சிகளால் மக்கள் சார்பாக ஒன்றுபட்டு தீர்மானம் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. நாட்டு மக்கள் குறித்து எந்தவித கவலையும் அவர்கள் கொள்ளவில்லை. தங்களின் அரசியல் எதிர்காலத்தையே குறிக்கோளாகக்கொண்டு நிபந்தனைகள் பல விதித்தனர். இத்தகைய பின்னணியில் யாரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வராத சூழலில்தான் வேறு வழியின்றி ரணிலை அழைத்து பொறுப்பை கொடுத்துள்ளனர்.



இருந்தபோதிலும் ரணிலின் நியமனம் காலத்திற்கு ஏற்றதாகும். நாட்டின் கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்தி குறித்து மிகச்சிறந்த முடிவை எடுக்கும் ஆற்றல் அனுபவம் வாய்ந்தவர், சர்வதேச இராஜதந்திர உறவும் மதிநுட்பமும் நிறைந்தவர் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. சர்வதேச ரீதியில் அங்கீகாரம் கொண்ட பல திட்டங்களை கடந்த காலங்களில் நாட்டுக்கு அவர் முன்வைத்திருந்தார். ஆனால், அவற்றுக்கு மக்களோ பிற அரசியல் தலைமைகளோ சரியான இடங்கொடுக்கவில்லை.

எவ்வாறாயினும் இன்றைய சூழலில் ரணிலால் மாத்திரமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை அவரின் எதிரிகள் கூட ஏற்றுக் கொண்டுள்ளனர். எவரும் அவர் தகுதியற்றவர், திறமையற்றவர் என்று கூறவில்லை. பிரதமராக பதவியேற்ற ரணிலுக்கு பலம்வாய்ந்த நாடுகள் பல தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளதுடன், பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்கு உதவுவதாகவும் உறுதியளித்திருக்கின்றன. இது நெருக்கடியில் சிக்குண்டு தவிக்கின்ற எமது மக்களின் விடிவுக்கு நல்ல சமிக்ஞையாகவே தெரிகிறது.

விரைவில் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, சீனா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளையும் அரபு நாடுகளையும் உள்ளடக்கி இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் சர்வதேச பொருளாதார மாநாட்டை நடத்தி, அதன்மூலம் நிலையான உதவித் திட்டத்திற்கான சர்வதேச ஒத்துழைப்பு பேரவையை அமைப்பதற்கு பிரதமர் ரணில் திட்டமிட்டுள்ளார். அவரது இந்த இராஜதந்திர முயற்சி வெற்றியளிக்குமாயின், இலங்கை பொருளாதார மீட்சி பெறுவதற்கு வெகுகாலம் எடுக்காது என்பது திண்ணம் எனத் தெரிவித்துள்ளார்.

# நோட்டன் தியகலவில் பாரிய மண்சரிவு

## மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு கோரிக்கை



(செ.தி.பெருமாள்)


மலையகத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக நோட்டன், தியகல 03ஆம் கட்டை வீதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதென நோட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதனால் அவ்வீதியூடாக வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளது.

அதற்கு மாற்று வழியாக நோட்டன் லக்சபான வழியாக வாகனங்கள் செல்ல அனுமதி வழங்கியுள்ளதாக நோட்டன் பொலிஸ் நிலையப் போக்குவரத்து அதிகாரி தெரிவித்தார்.

மஸ்கெலியா நகரிலிருந்து செல்லும் அனைத்து வாகனங்களும் லக்சபான வழியாக திருப்பி அனுப்பபடுகின்றது. சிவனொளிபாதமலை பருவகாலம் நிறைவு பெறுவதை முன்னிட்டு தியகல வீதியை பயன்படுத்த வேண்டாம் என கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

யாத்திரிகர்களின் நலன் கருதி அவர்கள் முன்னறிவித்தல் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# குமுதினி படகுப் படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவு தினம்









குமுதினி படகுப் படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (15) நெடுந்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

குமுதினி படகுப் படுகொலையில் கொல்லப்பட்ட மக்களுக்காக காலை 7.45 மணிக்கு நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், நெடுந்தீவு இறங்குதுறையில் அமைந்துள்ள குமுதினி படகுப் படுகொலை நினைவாலயத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி மலரஞ்சலி செய்யப்பட்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகு பயணித்துக் கொண்டிருந்தவேளை இலங்கை கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 36 பேரை வெட்டி படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

படுகொலைசெய்யப்பட்ட மக்கள் ஞாபகார்த்தமாக சூழகம் அமைப்பினால் வழங்கப்பட்ட மரங்கள் நெடுந்தீவில் நாட்டப்பட்டதுடன், பொதுமக்களுக்கு மரங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்களும் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

# மஹிந்தவின் வீட்டிலிருந்த நாயை திருடிய பெண்ணொருவர் கைது

(ஹேமந்த லியனபத்திரன)

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மொதமுலன வீட்டிலிருந்த வளர்ப்பு நாயொன்று திருடியதாக குறிப்பிடப்படும், வீரகெட்டிய பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரின் மகள் நேற்று (15) வீரகெட்டிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலவர சூழ்நிலையின்போது, மெதமுலன பிரதேசத்திலுள்ள முன்னாள் பிரதமரின் வீடு தீவைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே குறித்த வளர்ப்பு நாய் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரகெட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அநுராதபுரம் எம்.பிக்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்திய 22 பேர் கைது

அநுராதபுரம் நகரிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரின் வீடுகள் மற்றும் அநுராதபுரம் நகரசபைத் தலைவர் உள்ளிட்ட நகரசபை உறுப்பினர்களின் வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டு நட்டம் ஏற்படுத்தி, தீயிட்டு சேதப்படுத்திய சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் பிரபல வியாபாரி உள்ளிட்ட 22 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம், மிஹிந்திபுர, தஹயியாகம, மாத்தளை சந்தி, குருந்தன்குளம், மிஹிந்தலை, இராண்டாம் கட்டை, நொச்சியாகம, தம்புத்தேகம, கல்கிரியாகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20 தொடக்கம் 53 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் அநுராதபுரம், கருந்தன்குளம் பிரதேசத்திலுள்ள விகாரையொன்றின் பிக்கு மற்றும் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரபல வியாபாரியொருவரும் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் நகரில் கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட சிலர் கடந்த 09ஆம் திகதி இரவிலிருந்து திங்கட்கிழமை காலைவரையான காலப்பகுதியில் முன்னாள் அமைச்சர்களான சன்ன ஜயசுமன, செஹான் சேமசிங்க, சுமந்த திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன ஆகிய உறுப்பினர்களினதும் அநுராதபுரம் மாநகர சபையின் தலைவர் எச்.பீ.சோமதாச உள்ளிட்ட நகரசபை உறுப்பினர்களின் வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டு சொத்துகளை சேதப்படுத்தி தீயிட்டு சேதம் ஏற்படுத்தியது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# கலவரச் சம்பவங்களுடன் தொடர்புடைய 230 பேர் கைது

நாட்டில் கடந்த சில தினங்களில் கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 230 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 09ஆம் திகதியிலிருந்து நேற்று வரையான காலப்பகுதியில் பல்வெறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று (15) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்களில் 68 பேர் தற்போதுவரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது சம்பவங்கள் தொடர்பில் மேல்மாகாணத்தைச் சேர்ந்த 71 பேரும், தென் மாகாணத்தைச் சேர்ந்த 43 பேரும், மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 17 பேரும், வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த 36 பேரும், வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 47 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 13 பேரும், வட மாகாணத்தில் நபரொருவரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கிழக்கு மாகாணத்தில் எவரும் கைதுசெய்யபட வில்லை. ஊவா மாகாணத்தில் இருவர் என்ற அடிப்படையில் 230 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் தலையீட்டில் இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பொன்னாலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!








மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்த இறுதி யுத்தத்தின்போது படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் நினைவேந்தல் வாரத்தில், பொன்னாலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் பொன்னாலையிலுள்ள பொது அமைப்புகள் இணைந்து இச்செயற்பாட்டை முன்னெடுத்தன.

இறுதி யுத்தத்தின்போது, வன்னியில் சிக்கியிருந்த பொதுமக்களுக்கு அரசாங்கம் உணவுப் பொருட்களை அனுப்பியிருக்காமையால் மக்கள் பட்டினிச் சாவிற்கு தள்ளப்பட்டனர்.

எனினும், அங்கிருந்த சமூகத் தொண்டர்கள் கிடைத்த சொற்ப அரிசியைப் பயன்படுத்தி கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கினர். இதன்மூலமே இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாக்கப்பட்டனர்.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், உரிமைக்கான விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு முன்பாக இன்று கஞ்சி காய்ச்சப்பட்டது. ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் இதில் ஆர்வத்துடன் பங்குபற்றி கஞ்சி பெற்றுக்கொண்டனர்.






பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 12 அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரணிய சுவாமி தேவஸ்தானத்தின் முத்தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. திருவிழாவில், வணிக வைசிய செட்டியார் அறங்காவலர் சபைத் தலைவர் தர்மலிங்கம் சதாசிவம் செட்டியார், கொட்டாஞ்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (படங்கள் - எம்.நசார்)

# 244 கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை

வெசாக் போயாதினத்தை முன்னிட்டு 244 கைதிகள் ஜனாதிபதியால் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 34ஆவது உறுப்புரையினூடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாடுமுழுவதுமுள்ள சகல சிறைச்சாலைகளிலிருந்தும் மொத்தமாக 244 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு யாழில் சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம் நகரில் "விதையாக வீழ்ந்த இனம் விருட்சமாய் எழுந்திருக்கும்" என பல இடங்களில் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையினால் இந்த சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

முள்ளிவாய்க்கால் மே 18 படுகொலையை முன்னிட்டு இவ்வாறு பல இடங்களில் சுவரொட்டிகள் நேற்று முன்தினம் இரவுமுதல் ஒட்டப்பட்டுள்ளன.

# வீடுகளில் கொள்ளையிட்ட இருவர் கைது

வீடுகளில் கொள்ளையிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆறு பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமையவே சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் (14) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவனருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொட்டிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரும் மெகொட, கொலன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

20 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருட்களை கொள்ளையிட்ட இருவரதும் வீடுகளிலிருந்தும் விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையிலும் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கடுமையாக போதைப்பொருள் பயன்பாட்டுக்குள்ளான நபர்கள் என்பதுடன், இதற்கு முன்னரும், இவர்கள் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் வெல்லம்பிட்டிய, முல்லேரியா, கடுவலை, நவகமுவ, மாலபே மற்றும் அத்துருகிரிய ஆகிய பொலிஸ் நிலையங்களில் இந்த கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

# 'கோட்டா கோ கம' ஆரம்பிக்கப்பட்டு 37 நாட்கள் நிறைவு









(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு கோரிய நாடளாவிய ரீதியிலான ஆர்ப்பாட்டத்தில் கொழும்பு காலிமுகத்திடலிலுள்ள, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆர்ப்பாட்டம் நேற்றுடன் 37 நாட்களைக் கடந்துள்ளது.

இன்று வெசாக் தினமாக உள்ளதால் அதிகளவான மக்கள் தற்போது ஒன்றுகூடி வருகின்றனர்.

நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டக் களத்தில் உள்ளவர்கள் ஆர்ப்பாட்ட பகுதியில் வெசாக் தோரணங்களை தயாரித்து அவற்றை தொங்கவிட்டு வருவதை காண முடிந்தது.

அத்துடன், வெசாக் தினத்தை முன்னிட்டு ஒருசில நலன்விரும்பிகளால் தானசாலை அமைக்கப்பட்டு பகல் உணவு வழங்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

பௌத்த மற்றும் கத்தோலிக்க அருட்சகோதரிகளின் சமய பிரார்த்தனைகளுக்குப் பின்னர் அவர்களால் வருகை தந்தவர்களுக்கு தானம் வழங்கப்பட்டது.

இதேவேளை, காணாமலாக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் நீதி வேண்டியும் அவர்கள் கொலைசெய்யப்பட்டமை மற்றும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உள்ளிட்ட விடயங்களுக்கும் எதிராகவும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் வாய்பேச முடியாத அங்கவீனர்களும் போராட்டக்களத்திற்கு வருகை தந்து தமது எதிர்ப்புகளை தெரிவித்ததுடன். தமது கண்டனங்களை சைகை மொழி மூலம் ஊடகங்களுக்கு தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டு மக்கள் மதவாத, இனவாத தூண்டுதல்களுக்கு உள்ளாகக்கூடாது

## நுவரெலியா சர்வமதக்குழுவினர் வேண்டுகோள்

(கினிகத்தேனை நிருபர்)

எமது நாட்டில் நிலவும் அரசியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மிகவும் பாரதூரமாக தலைவிரித்தாடுகின்றன. மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதைபோல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனவாதம், மதவாதம் போன்ற தூண்டுதல்களுக்கு உள்ளாகக்கூடாது என நுவரெலியா மாவட்ட சர்வமத செயற்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பன்மைத்துவம் தொடர்பான தெளிவுபடுத்தல் மற்றும் கலந்துரையாடல் கொட்டகலை ஹில்கூல் விருந்தகத்தில் நேற்று முன்தினம் 14ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கேட்டுக்கொண்டனர்.

தற்போது மக்கள் மிகவும் அசாதாரணமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக பாடசாலை முதல் அனைத்து நிறுவனங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. இவ்அசாதாரண சூழலிலிருந்து விடுபட வேண்டும். குறிப்பாக, அனைவரும் அமைதியாகவிருந்து எமது நாட்டுக்காக சிந்தித்து இலங்கையர் என்ற ரீதியில் இருந்தால் அதுவே மிகவும் பயனுடையதாகவிருக்கும்.

இலங்கை தேசத்தை மற்றைய நாடுகளைவிட




முன்மாதிரியாக கொண்டு வருவதற்கு நாம் அனைவரும் சிந்தித்து நடத்தல் வேண்டும். எல்லா மதங்களையும் உயர்வாக எண்ணுவோம், உரிமைகளை கேட்கும்போது பொதுச்சொத்துகளுக்கும் மனித உயிர்களுக்கும் எவ்வித சேதமும் விளைவிக்காமல் எமது உரிமைகளை கேட்க வேண்டும் என்றனர்.

இதன்போது அகில இலங்கை ஜிம்மியத்துல்லா ஹட்டன் கிளையின் உபதலைவர் எம்.எஸ். வுசைன், நுவரெலியா மாவட்ட சர்வமத குழுத் தலைவர் பிரம்மஸ்ரீ நந்தகுமார் குருக்கள், சி.சி.மிசன் மத போதகர் மற்றும் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

# இராகலை உணவகத்திலிருந்து விழுந்த யுவதி அவசர சிகிச்சைப் பிரிவில்

(செ.திவாகரன்)

இராகலை நகரில் இயங்கும் உணவகம் ஒன்றின் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்த யுவதி ஒருவர் பலத்த காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் 14ஆம் திகதி காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒரு பிள்ளையின் தாயான இராகலை - ஹல்கரனோயா தோட்டத்தைச் சேர்ந்த பி.நித்தியபிரபா (வயது 35) என்ற யுவதியே பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்த யுவதி உணவகத்தின் மூன்றாவது மாடியிலிருந்து தொழில் ஆரம்பித்த சிலமணி நேரத்தில் ஜன்னல் வழியாக பாய்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்திற்கான காரணம் தொடர்பில் இராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாமரத்திலிருந்து தவறி வீழ்ந்த குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

(யாழ். நிருபர்)

மாமரத்தில் ஏறி கொப்பு வெட்டியவர் தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் நகுலேந்திரன் (வயது - 48) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

மாமரத்தில் 25 அடி உயரத்தில் ஏறி கொப்பு வெட்டும்போது அவர் நின்ற கொப்பு முறிந்ததால் தவறி வீழ்ந்துள்ளார்.

கீழே வீழ்ந்து சுயநினைவற்றுக் காணப்பட்ட அவரை யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்த்தபோதும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் கடும் மழை காரணமாக ஆயிரத்து 492பேர் பாதிப்பு

## மாவட்ட செயலாளர் மாலனி லொகுபோதாகம

(சிவா ஸ்ரீதரராவ், எம்.எல்.எஸ்.முஹம்மத்)

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த ஒருசில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக இரத்தினபுரி களுகங்கையின் நீர் மட்டம் 8.5 மீற்றர் வரை உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் பாரிய வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளதால் களுகங்கையை அண்மித்த பகுதிகள் மற்றும் தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு இரத்தினபுரி மாவட்ட செயலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர், அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவி மாலனி லொகுபோதாகம நேற்று முன்தினம் 14ஆம் திகதி வெளியிட்ட பேரிடர் தகவல் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரத்தினபுரி, எலபாத, அயகம, கலவான, பெல்மதுளை, குருவிட்ட மற்றும் கஹவத்தை ஆகிய 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 372 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 492 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் 09 வீடுகளும், எலபாத்தையில் 01 வீடும், கலவானவில் 14 வீடுகளும், பெல்மதுளையில் 29 வீடுகளும், குருவிட்டவில் 08 வீடுகளும், கஹவத்தையில் 02 வீடுகளுமாக மொத்தம் 63 வீடுகள் சேதமடைந்துள்ளன.

மேலும், கலவானை பிரதேச செயலகப் பிரிவில் மேலும் 03 சொத்து சேதங்களும் பதிவாகியுள்ளன.

தற்போது 104 குடும்பங்களைச் சேர்ந்த 378 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் 102 குடும்பங்களைச் சேர்ந்த 373பேரும் 02 அயகம குடும்பங்களைச் சேர்ந்த 05 பேரும் உள்ளனர்.

அத்துடன், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரண்டு பாதுகாப்பான நிலையங்களில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் முகாமிட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சிவனொளிபாதமலை யாத்திரை இன்றுடன் நிறைவு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

2021-2022ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரை இன்றுடன் நிறைவு பெறுவதாக பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையின் விகாராதிபதி தம்மதித்கு தேரோ தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புனித போயா தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வருடத்தின் புனித யாத்திரை கடந்த வருடங்களில் கொரோனா பரவல் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு பருவக்காலத்தில் பெருமளவான யாத்திரிகர்கள் வருகைதந்திருந்ததோடு அவர்களுக்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நேற்றும் இன்றைய தினமும் சிவனொளிபாதமலையில் இறுதிச் சடங்குகளின் பின் புத்தரின் விசேட சிலையை தாங்கிய ஊர்வலம் சிவனொளிபாதமலை ஸ்ரீபாத ஸ்தானத்திலிருந்து பலாங்கொடை வழியாக பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையில் ஒப்படைக்கப்படவுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு வடக்கு – கிழக்கிலிருந்து பேரணி

(யாழ். நிருபர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இம்முறை வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து பேரணி ஒன்றை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"இன விடுதலையைத் தேடி முள்ளிவாய்க்காலை நோக்கி" என்ற கருப்பொருளில் இடம்பெறும் இப்பேரணிகள் கிழக்கு மாகாணத்திலிருந்து நேற்றும் (15) வடக்கு மாகாணத்திலிருந்து இன்றும் (16) ஆரம்பிக்கப்பட்டு மே 18ஆம் திகதி இரண்டு பேரணிகளும் முள்ளிவாய்க்காலை சென்றடைந்து நினைவேந்தலில் பங்கேற்கவுள்ளன.

யாழ். ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில்,




வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் மற்றும் பொது அமைப்புகள், சிவில் சமூகங்கள் போன்ற அமைப்புகள் இணைந்து பேரணியை மேற்கொள்ளவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் நேற்று 15ஆம் திகதி ஆரம்பமாகிய பேரணி பொத்துவிலில் ஆரம்பித்து திருக்கோவில், அக்கரைப்பற்று, கல்முனை, களுவாஞ்சிக்குடி ஊடாக திருகோணமலை நோக்கி அங்கிருந்து முல்லைத்தீவின் முள்ளிவாய்க்காலை சென்றடையும்.

வடமாகாணத்தில் இன்று (16) ஆரம்பிக்கும் பேரணி வல்வெட்டித்துறையில் ஆரம்பித்து யாழ்ப்பாணம், தென்மராட்சி, பரந்தன், பூநகரி, வெள்ளாங்குளம், மாங்குளம் ஊடாக முள்ளிவாய்க்காலை அடையும். பிரதான வீதிகளில் நடந்தும் ஏனைய பகுதிகளில் வாகனங்கள் ஊடாகவும் இந்தப் பேரணி செல்லவுள்ளது.

அரசியல் தரப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள், மீனவ சங்கங்கள், போக்குவரத்து அமைப்புகள் அனைவரையும் பங்கேற்க அழைக்கின்றோம் - என்றார்.

# மன்னார் இளைஞர்களால் சாந்திபுரம் விகாரையை சுத்தப்படுத்தும் செயற்பாடு

(மன்னார் நகர் நிருபர்)

"இளைஞர்கள் மத்தியில் சமூக ஒத்திசைவை பலப்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் வாழ்வுக்கான தன்னார்வத் தொண்டர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ரஹமா நிறுவனத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இளைஞர் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக சாந்திபுரம் பௌத்த விகாரை சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

பௌத்த மக்களால் வெசாக் தினம் கொண்டாடப்படுகின்ற நிலையில், திருமதி ரெஜினா இராமலிங்கம் தலைமையில் லியோ மற்றும் இளைஞர்கழகங்கள் அத்துடன் தன்னார்வ இளைஞர்கள் இணைந்து குறித்த சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சிரமதானப் பணியில் மும்மதத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்துகொண்டு மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை செயற்பாட்டு ரீதியாக வெளிப்படுத்தினர். குறித்த சிரமதானப் பணியில் அதிகளவான இஸ்லாம் இளைஞர், மற்றும் யுவதிகளும் கலந்துகொண்டு சிரமதானப் பணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் விளக்கமறியல் சிறைக்கைதிகள் மூவருக்கு விடுதலை

(வவுனியா நிருபர்)

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நாடளாவிய ரீதியில் 244 சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அந்த வகையில், வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறு குற்றங்களுக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த 35, 45, 63 ஆகிய வயதுகளையுடைய 3 ஆண் கைதிகள் நேற்று (15) காலை விடுதலை செய்யப்பட்டனர்.



வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் ந.பிரபாகரன் தலைமையில் கைதிகள் விடுவிப்பு நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி நினைவேந்தல் நிகழ்வு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (14) சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையம் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்க்கும் நிகழ்வும் அதனோடு இணைந்த அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றிருந்தன.

நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை, சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், உப தவிசாளர்களான பாலமயூரன் மற்றும் மயூரன், நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி பருகி நினைவேந்தலை அனுஷ்டித்தனர்.

அத்தோடு, யுத்த காலத்தில் சாவகச்சேரி பொதுச்சந்தைப் பகுதியில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் உயிர்நீத்த பொதுமக்கள் மற்றும்





முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கு சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையம் முன்பாக ஈகைச் சுடரேற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

## கைதுசெய்யப்பட்ட நால்வர் பிணையில் விடுதலை

நாவலப்பிட்டி நகரில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தின் பேரில் நால்வர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரால் 16 பேருக்கு எதிராக நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய கைதுசெய்யப்பட்ட நால்வரும் 25- 50 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் 14ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட நால்வரையும் நாவலப்பிட்டி நீதவான் நிலந்த விமலவீர முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, அவர்களை தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறும் இந்த வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# முச்சக்கரவண்டி – மோட்டார்சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் நேற்று முன்தினம் (14) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார்சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த தவசிகுளம் மற்றும் மந்துவில் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் பாண் விற்பனை செய்து திரும்பிய இளைஞனிடம் வழிப்பறி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் பாண் விற்பனை செய்துவிட்டு திரும்பிய இளைஞனை வாள் முனையில் அச்சுறுத்தி 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி என்பவற்றை வழிப்பறி கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் - அச்சுவேலி வீதியில் கடந்த 12ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட இளைஞனால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் அன்றைய தினம் இரவு, யாழ்ப்பாணம் பகுதியில் பாண் விற்பனை செய்த பணத்துடன் குறித்த வீதி ஊடாக அச்சுவேலி நோக்கி தனது மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை, மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த மூன்று வழிப்பறிக் கொள்ளையர்கள் அவரை வழிமறித்துள்ளனர்.

அதனையடுத்து இளைஞன் மோட்டார்சைக்கிளை நிறுத்தியவேளை, கொள்ளையர்கள் தாம் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து இளைஞனை அச்சுறுத்தி அவரது பெறுமதியான கையடக்கத் தொலைபேசி மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இன விடுதலை வேண்டி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான மக்கள் பேரணி









(வாழைச்சேனை நிருபர்)

இன விடுதலை வேண்டி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான மக்கள் பேரணி நேற்று (15) அம்பாறை மாவட்டம் பொத்துவிலில் ஆரம்பமாகியது.

இப்பேரணியை வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உறவினர்களின் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று இப்பேரணி பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு திருக்கோவில், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, காத்தான்குடி வீதி வழியூடாக கல்லடி பாலத்தை சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து இன்று (16) மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து செங்கலடி, வாழைச்சேனை, வாகரை ஊடாக திருகோணமலை சிவன் கோவில் முன்றலை சென்றடையும். நாளை (17) காலை திருகோணமலை சிவன் கோவில் முன்றலிலிருந்து ஆரம்பித்து நிலாவெளி ஊடாக தென்னைமரவாடியை சென்றடைந்து வவுனியா நெடுங்கேணி வீதி வழியாக முல்லைத்தீவைச் சென்றடையும்.

தொடர்ந்து நாளை மறுதினம் (18) வடமாகாணத்திலிருந்து வரும் காணாமலாக்கப்பட்டோர் உறவினர்களின் பேரணியுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்றலில் சென்றடையவுள்ளது.

முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம் என்ற தலைப்பில் முள்ளிவாய்க்கால் அவலநிலை குறித்து அதனை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த 12.05.2022 ஆம் திகதி தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நினைவுகூரப்பட்டு வரும்வேளை இப்பேரணியானது மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மதகுருமார்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# வியாபார குறியீடு இல்லாமல் எமோனியம் சல்பைட் பசளையை லொறியில் கொண்டுசென்ற இருவர் கைது





(அப்துல்சலாம் யாசீம்)

ஏறாவூர் பகுதிக்கு வியாபார குறியீடு இல்லாமல் எமோனியம் சல்பைட் என்றழைக்கப்படும் பசளையை ஏற்றிச்சென்ற லொறியுடன் இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதி ரொட்டவெவ பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து குறித்த வாகனத்தை நேற்று (15) காலை சோதனையிட்டபோது இப்பசளை கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஹொரவப்பொத்தானை - இஹல அங்குநொச்சி பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 40 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# 20இற்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு

## ஆதரவு திரட்டுவது தொடர்பில் பேச்சு !



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான திகாமடுல்ல மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், திருமலையை சேர்ந்த எம்.எஸ்.தௌபீக் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் அநுராதபுர மாவட்ட இஷாக் ரஹுமான் ஆகியோர் நேற்று முன்தினம் (14) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து சந்தித்தனர்.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் முகமாக ஐக்கிய மக்கள் சக்திக்கு தங்கள் ஆதரவை வழங்குவதாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்கால அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து முன்னெடுப்பதாகவும் இதன்போது அவர்கள் தெரிவித்துள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் உறுதிப்படுத்தியது.

மேற்குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு பின்னர் தனது ஆதரவிலிருந்து விலக்கிக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மூதூரில் 4000 மாமரக் கன்றுகள் வழங்கிவைப்பு



(திருமலை நிருபர்)

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் Development of Export Agri Zone logis எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4000 மாமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (13) மூதூர் பிரதேச செயலகத்தில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி. எம். முபாரக் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் முன்னர் செயற்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்திற்கிணங்க Development of Export Agri Zone logis எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூதூர் பிரதேசத்திற்கு குறித்த 4000 Tom EJC மாமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

இப்பயிர்ச்செய்கையை சரியான முறையில் மேற்கொள்வதன் மூலம் சிறந்த அறுவடையை பெறுவதுடன் அதிக வருமானத்தையும் ஈட்டக்கூடியதாக அமையும். இந்த இன மாம்பழத்திற்கு சந்தையில் சிறந்த கேள்வி காணப்படுவதுடன், ஒரு கிலோ மாம்பழம் ரூபா 350 முதல் ரூபா 450 விலைகளிடையே விற்பனை செய்யப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு புன்னச்சோலையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## இருவர் கைது; கசிப்பு கோடா மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள புன்னச்சோலை பிரதேசத்தில் கசிப்பு உற்பத்திசெய்யும் வீடொன்றை கடந்த வெள்ளிக்கிழமை (13) பொலிஸார் முற்றுகையிட்டபோது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைதுசெய்ததுடன், 2 வீற்றர் கசிப்பு மற்றும் கோடா கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய சம்பவதினத்தன்று மாலை குறித்த பகுதியிலுள்ள வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டபோது, அங்கு கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இருவரை கைதுசெய்ததுடன், 2 லீற்றர் கசிப்பு மற்றும் கோடா கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வமத சமூகத்தவர்களுடன் நோன்புப் பெருநாள் கொண்டாட்டம்



(சீனக்குடா நிருபர்)

புனித ரமழான் பெருநாளையொட்டி சர்வமத சமூகத்தவருடனான "சமூக நல்லிணக்க கலந்துரையாடலும் மதிய போசன விருந்தும்" என்ற தொனிப்பொருளில் அண்மையில் கிண்ணியாவில் நிகழ்வொன்று இடம்பெற்றது.


இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு, கிண்ணியா, ஆலங்கேணி, வெள்ளை மணல் ஆகிய பிரதேசங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கலாநிதி எம்.எம்.நயீமின் அனுசரணையோடு நடத்தப்பட்ட இம் முன்னோடி நிகழ்வில் சகோதர சமூக அமைப்புகளின் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர், வைத்தியர்கள், சகோதர மற்றும் மாவட்ட மாகாண சுகாதாரத்துறை அதிகாரிகள் என சுமார் 100 பேர் அளவில் கலந்துகொண்டு தங்களது மகிழ்ச்சியையும், நன்றிகளையும் தெரிவித்தனர்.

நாட்டினது தற்போதைய சூழலில் ஆரோக்கியமான நிகழ்வாகவும் இது பரஸ்பரம் தொடரப்படவேண்டிய ஒன்றாக இருப்பதோடு, ஏனைய பிரதேசங்களுக்கும் ஒரு முன்மாதிரி செயற்பாடு எனவும் இதன்போது கருத்துகள் பகிரப்பட்டன.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கிண்ணியா கிளையின் தலைமையில், பிரதேச சிவில் சமூக அமைப்புகள் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

# மட்டு. கவிஞர் கவிதா லலித்குமாருக்கு யூத் எக்ஸலன்ஸ் உயரிய சர்வதேச விருது



(பாண்டிருப்பு நிருபர்)

சர்வதேச நிறுவனமான world women council இனால் வருடந்தோறும் பல்வேறுபட்ட துறைகளில் தேர்ச்சி பெற்றதும் தனித்துவம் வாய்ந்ததுமான பெண்களுக்கு உயரிய சர்வதேச விருதான Women Icon விருதை உலகளாவிய ரீதியாக வழங்கி வருகின்றது.

அந்தவகையில் இவ்விருதுக்காக இலக்கியம், சமூக, கலை, கலாசார மற்றும் தலைமைத்துவம் போன்றவற்றில் சிறந்த ஆளுமையுடன் செயற்படுகின்ற முன்மாதிரியான பெண்களுக்கு இவ்விருதுகள் பரிந்துரை செய்யப்பட்டு அதிலிருந்து உரிய தகைமையைப் பெற்றவர்களை தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச ரீதியாக 15 நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட துறைசார் சிறப்புத் தேர்ச்சியுடைய நடுவர்கள் இவ்விருதுக்கான விருதாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

மட்டு. மாவட்டத்திலிருந்து இம்முறை கவிஞர் திருமதி கவிதா லலித்குமார் குறித்த விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 20 வருட காலமாக கவிதை, சிறுகதை, தொடர்கதை, பாடல்கள் போன்ற இலக்கியம்சார் படைப்புகளை பத்திரிகை, சஞ்சிகை, மின்னிதழ்கள் மற்றும் கவிக்குழுமங்களில் தொடர்ந்து வெளியிட்டுவருகின்றார்.

இவரின் எழுத்தாக்கமானது சமூகம் சார்பானதாகவும் சமூகத்தினை விழிப்பூணர்வூட்டும் கருப்பொருள் கொண்டதாகவும் நவீனகால நடைமுறைகள் தொடர்பான தொழில்நுட்ப வளர்ச்சியின் மாறுபட்ட கலாசார விழுமியங்களை பிரதிபலிப்பனவாகவும் மனித வாழ்வியலின் யதார்த்த பண்புகளான காதல், இன்ப துன்ப நிலைகள் உறவுகளுக்கிடையேயான அந்நியோன்னியம் போன்றவற்றை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளது.


இவரின் பல்தரப்பட்ட படைப்புகளில் மிக முக்கியமானதாக எதிர்பார்ப்புக்காலம், அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, உயர்விலும் தாழ்வு, மாற்றம் போன்ற சிறுகதைகளும் காத்திருப்பு, விதிவரைந்த பாதைவழியே, நிழல்கள் நிஜங்களாகும், நேரம் போன்ற தொடர் கதைகளும் பிரியங்கவின் பிரதிபலிப்பாய் அன்பொன்றே நிரந்தரம், விருந்து, பூமித்தாய் அழுகிறாள், மீண்டெழுவோம், நானும் நீயும், உன்விழிகளால் மொழிபேசி, ஒரு ஆணின் பிரசவம் போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. இவரின் கவியின் கவித்துளிகள் முகநூல் வாயிலாக 2020ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து 3000இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச வாசகர்களின் பார்வைக்கு உட்பட்டிருக்கின்றமை Your quotes இணையத்தளப் பக்கத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும்.

இவ்வாறு பல்வேறுபட்ட எழுத்தாக்கப் படைப்புகளில் சிறந்து விளங்கும் இவர் Times momen நிறுவனத்தினால் கடந்த 30.03.2022 அன்று Youth excellence. Award எனும் விருதுக்காக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். இவ்விருது வழங்கும் நிகழ்வானது எதிர்வரும் ஜூலை மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூரும் நிகழ்வை படமெடுத்த புலனாய்வாளர் துரத்தியடிப்பு







(மட்டக்களப்பு நிருபர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாளை நினைவுகூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூரும் நிகழ்வொன்று நேற்று முன்தினம் (14) மட்டக்களப்பு சத்துருகொண்டான் படுகொலை நினைவுத்தூபி முன்பாக இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சத்துருகொண்டான் படுகொலை நினைவுத்தூபி முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு வீதியால் சென்ற மக்களுக்கு வழங்கப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

இதன்போது மதகுருமாருக்கு முதலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, வீதியால் பயணித்த மக்களுக்கும் கஞ்சி வழங்கப்பட்டது. இதன்போது வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் பின்வருமாறு அச்சிடப்பட்டிருந்தது,

2009ஆம் ஆண்டு தமிழர் மீது கட்ட விழ்க்கப்பட்ட போரின் இறுதி நாட்கள் அவை. நாற்றிசையும் சூழ்ந்திருந்த இராணுவம் அப்பாவி மக்களின் தலைகளைச் சுட்டுச் சிதறடித்துக்கொண்டிருந்தது. அதுபோதாதென்று ஏவப்பட்ட எறிகணைகள் - கொத்துக்குண்டுகள் மக்களின் பதுங்குகுழிகள் மீது கொத்துக்கொத்தாய் வீழ்ந்து வெடித்தன. பிணங்களும், விழுப்புண்ணடைந்தோர் கொதிக்கும் குருதியுமாக முள்ளிவாய்க்கால் எனப்படும் ஈழ அவலநிலம் காட்சிதந்தது.

விடுதலையை அவாவிய ஒரு தேசத்தின் மக்களை மரணமும் பசியும் சூழ்ந்திருந்தன. பணத்திற்கு எந்தப் பெறுமதியும் இருக்கவில்லை, வாங்குவதற்கு எந்த உணவுப்பொருளும் இருக்கவில்லை. இந்நிலையில்தான், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் சில தொண்டு நிறுவனங்களும் இணைந்து, வன்னி பெருநிலப்பரப்பின் சொந்தக்காரர்களுக்கு அவர்தம் உயிர் பிழைப்புக்கென முள்ளிவாய்க்கால் கஞ்சி என்கிற ஜீவாமிர்தத்தை அறிமுகப்படுத்தினர். நீரினுள் சிறிதளவு அரிசியையும் கிடைத்தற்கரிய உப்பையும் இட்டு காய்ச்சி உருவாக்கப்பட்டதே இவ்வுணவு.

சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் வெறும் வயிற்றுடன் கஞ்சியைப் பெற வரிசையில் காத்திருந்தனர். இந்த காத்திருப்பின்போதுகூட கொத்துக்குண்டுகளாலும் விமானத் தாக்குதல்களாலும் பல்லாயிரம் உயிர்கள் காவுவாங்கப்பட்டன.

காத்திருந்து காத்திருந்து கையில் வாங்கிய கஞ்சியை, ஒரு மிடறு பருகி வயிற்றில் தாங்கிய சிசுவின் பசியாற்றுவதற்கு முன்பே வயிறு கிழிந்து, இரத்தம் பீறிட குடலும் கருவும் வெளிச்சிதறி மாண்டுபோன பேரவலங்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியின் விரும்பத்தகாத சுவையாக எம் தலைமுறையின் நனவிலியில் பதிந்துள்ளது.

நீதிகேட்டுப் போராடும் எம்மக்களின் அவலக்குரல்களை இந்த உலகம் செவிமடுக்கும் நாள்வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி பெருவலியாகவும், அடையாளமாகவும் உணர்த்தப்பட வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும். உணர்வுபூர்வமான இப்பெரும் மக்கள் எழுச்சியின் போராட்ட வழிமுறைகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வரலாற்றில் என்றும் நிலைத்தே நிற்கும்.

இதன்போது அருட்தந்தையர்களான அருட்பணி ஜோன் ஜோசப்மேரி, அருட்பணி கே.ஜெகதாஸ், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஏற்பாட்டாளர் குருசுமுத்து லவகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது குறித்த நிகழ்வை படம் எடுத்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களினால் துரத்தியடிக்கப்பட்டார்.

## போடியார் புலம்பல்!



ராஜபக்ஷாக்களின் கொள்கைய உடனே மாற்றுவதற்கு தயாராம் எண்டு பிரதமர் ரணில் ஐயா சொல்லித்தாரு எலுவா?

நீ அவங்கட கொள்கைய மாற்றவேண்டாம் உடனே கோட்டாவ ஜனாதிபதியில இருந்து மாற்று பாப்பம்..! முதுகு எலும்பு இருந்தா இத செய்துபோட்டு எதயாவது கத.

# எங்கள் உறவுகளை கொன்றொழித்தவர்கள் இன்று சொந்த நாட்டிலேயே ஒளிந்துகொண்டுள்ளனர்

**காணாமலாக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி செல்வராணி சாடல்**







(மட்டக்களப்பு நிருபர்)

தமிழர்கள் விட்ட கண்ணீர் இன்று இந்த அரசை ஆட்டிப் படைக்கின்றது. எங்களது உறவுகளை அழித்தவர்கள் இன்று தங்களது சொந்த நாட்டுக்குள்ளே பாதுகாப்புத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள் - என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க அம்பாறை மாவட்ட தலைவி த.செல்வராணி தெரிவித்துள்ளார்.

''உப்பில்லாக் கஞ்சி பரிமாறுவோம். முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்'' என்ற தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் அவலநிலையை நினைவுகூரும் முகமாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வின் இரண்டாம் நாள் அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்தில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே அவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்பது இன்று பதின்மூன்று வருடங்களின் பின்னர் இலங்கையில் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எங்களது சொந்தங்களை, உறவுகளை, உடைமைகளை அழித்தவர்கள் இன்று தங்களது சொந்த நாட்டுக்குள்ளேயே பாதுகாப்புத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். இருப்பதற்கு தங்க இடமில்லாமல், ஒளிந்துகொள்ளக்கூட இடமில்லாமல் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். தமிழர்கள் விட்ட கண்ணீர் இன்று இந்த அரசை ஆட்டிப்படைக்கின்றது - என்றார்.

இந்நிகழ்வில் சங்கத்தின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் உப்பிலாக் கஞ்சி தயார் செய்து பிரதேச பொதுமக்களுக்கு வழங்கினர். இதனை பொதுமக்களும் பெரும் ஆவலுடனும், உணர்வுபூர்வமாகவும் அருந்தினர்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்த காலப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் நினைவாகவும், அவ்வுறவுகள் பட்ட அவலங்களை பறைசாற்றும் முகமாக வும் முள்ளிவாய்க்கால் கஞ்சிவாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. குறித்த நிகழ்வானது மே 12 தொடக்கம் மே 18 வரையான காலப்பகுதிகளில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சவூதியில் திடீர் மரணமடைந்த ஏறாவூர் நபரின் மகள் தந்தையின் தொழில் வழங்குநருக்கு உருக்கமான கடிதம்



சவூதி அரேபியாவில் கடந்த 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திடீர் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்த மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் சங்கரமூர்த்தி சத்தியசீலன் (வயது 36) என்பவரின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை விமானம் மூலம் கொழும்பை வந்தடைந்தது.

சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், சத்தியசீலனின் தொழில் வழங்குனர் ஆகியோர் சடலத்தை விரைவாக கொண்டுவருவதற்கு முன்னின்று பாடுபட்டனர்.

நீர்கொழும்பில் மரண பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பிற்பாடு சடலம் சத்தியசீலனின் மனைவியிடம் ஒப்படைக்கப் பட்டது. மனைவியின் ஊரான ஏறாவூருக்கு சடலம் நல்லடக்கத்துக்காக கொண்டுவரப்படுகின்றது.

இதேநேரம் இறந்தவரின் 14 வயது மகள் தந்தையின் தொழில் வழங்குனருக்கு குடும்பத்தின் கையறு நிலையை விளங்கப்படுத்தி மிகவும் உருக்கமாக கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார்.

**கடிதம் வருமாறு**

சலாம். இறைவனின் ஆசீர்வாதம் உங்களுக்கு கிடைப்பதாக. நான் சீலனின் ஒரே மகள். எனக்கு வயது 14. கனத்த இதயத்துடன் எழுதுகின்றேன். எனது தந்தையார் தங்களுடைய நிறுவனத்தில் கடந்த 08 வருடங்களாக பணிபுரிந்து வந்த நிலையில், கடந்த 2022.04.24 அன்று திடீர் மரணமடைந்தார் என்பது தாங்கள் அறிந்ததே. நானும், எனது அம்மாவும், ஏனைய உறவுகளும் இன்னமும் அந்த பாரதூரமான வலியிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றோம்.

நாம் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எமது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகவே எனது தந்தையார் நாடு விட்டு நாடு வந்து தொடர்ந்தேச்சையாக தொழில் புரிந்தார். குறிப்பாக எங்களுக்கு சொந்த வீடு கிடையாது. எமக்கென்று சொந்தமாக வீடு ஒன்றை கட்டி எங்களை குடியேற்ற வேண்டும் என்பது எனது அப்பாவின் அபிலாஷையாக இருந்துவந்தது. எப்போதும் எம்முடன் அதைப்பற்றி பேசி வந்தார். இதுவே அவரின் இறுதி விருப்பமாகவும் இருந்திருக்கக்கூடும்.

என்னுடைய கல்வி, எதிர்காலம் ஆகியன பற்றியும் அடிக்கடி பேசி வந்தார். கடந்த நான்கு வருடங்களாக நானோ, என் அம்மாவோ, ஏனைய உறவுகளோ அவருடைய முகத்தைப் பார்க்கவில்லை. இப்போது அவரை சடலமாக பார்க்கவேண்டிய சோகம் ஏற்பட்டிருக்கின்றது. அவரின் சடலத்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு தாங்கள் எடுத்துள்ள அனைத்து முயற்சிகளுக்கும் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

எனக்கு உங்களை தெரியாது. ஆனால், எனது தந்தையார் தொலைபேசியில் பேசியபோதெல்லாம் உங்களை பற்றி கூறி வந்திருக்கின்றார். நீங்கள் உயரிய பண்புகளை உடைய, மனிதாபிமானம் மிக்க சிறந்த முதலாளி என்று அடிக்கடி கூறிவந்தார். அவர் உங்களின் விசுவாசமிக்க ஊழியனாக வாழ்ந்து மறைந்துள்ளார். நீங்கள் அவரை அரவணைத்து நடந்துவந்த பெருந்தன்மைக்காக மீண்டும் நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

எனது தந்தையின் இழப்பு எந்த வகையிலும் எனக்கும், என் குடும்பத்துக்கும் ஈடுசெய்ய முடியாதது. நாம் இதிலிருந்து மீள்வதென்பது ரொம்பவே கடினமானது. இறைவன் எமக்கு அந்த வலுவை தரவேண்டும். நாம் இப்போது ஏதிலிகளாக மாற்றப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் எனதும், எமது குடும்பத்தினதும் எதிர்கால இருப்பை கருத்திற்கொண்டு தாங்கள் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்வீர்கள் என்கிற நம்பிக்கை மாத்திரம்தான் மிஞ்சி நிற்கின்றது. நன்றிகள்.

# வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்கள் பொலிஸாரால் மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)

வீடொன்றில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவான மதுபானப் போத்தல்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (14) இரவு பெரியகல்லாறு கிராமத்திலுள்ள வீடு ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த பெருந்தொகையான மதுபானப் போத்தல்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை விடுமுறை தினங்களாக உள்ளதனால் இதனை முன்னிட்டு அதிக விலைக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கே இவ்வாறு பெருந்தொகையான மதுபானங்கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுதத் மாசிங்கவின் பணிப்பின்பேரில் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ஜெயரத்னவின் கண்காணிப்பில், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.அபேயவிக்கிரமவின் தலைமையில், உப பொலிஸ் பரிசோதகர் ஜே.பி.ஜோய், பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (63435), பொலிஸ் கான்ஸ்டபிள் பிரதீபன் (8209), பொலிஸ் கான்ஸ்டபிள் ரமணன் (33818), பொலிஸ் கான்ஸ்டபிள் சம்பத் (38774), பொலிஸ் கான்ஸ்டபிள் விதுசன் (99077), பொலிஸ் கான்ஸ்டபிள் ஹேரத் (732577), பொலிஸ் கான்ஸ்டபிள் சனுஜன் (90091), பொலிஸ் கான்ஸ்டபிள் விஜிதான் (3886) உள்ளிட்ட குழுவினரே இதனைக் கைதுசெய்துள்ளனர்.

ஆறு இலட்சம் மதிக்கத்தக்க மதுசாரம் மற்றும் பியர் போத்தல்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வீட்டில் மதுபானப் போத்தல்களை பதுக்கிவைத்திருந்த சந்தேகத்தின் பேரில் சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரிவித்தனர்.

# மதுபோதையில் இடையூறு விளைவித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பிரதேசத்தில் மதுபோதையில் அமைதிக்கு பங்கம் விளைவித்த முல்லைத்தீவு மாவட்ட மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் கான்ஸடபிள் ஒருவரை கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருக்கோவில் பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் திருக்கோவில் மண்டானை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் விடுமுறையில் வீடு வந்துள்ள நிலையில், சம்பவதினத்தன்று இரவு 10 மணியளவில் மதுபோதையில் அந்தப் பகுதியில் அமைதிக்கு பங்கம் விளைவித்த நிலையில், 119 பொலிஸ் அவசர சேவைக்கு வந்த தொலைபேசியையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று அவரை கட்டுப் பாட்டிற்கு கொண்டுவர முயற்சித்தபோது அவர் பொலிஸாரிடம் அநாகரிகமாக நடந்து கொண்டார்.

இதனையடுத்து அவரை கைதுசெய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.

# கொக்கட்டிச்சோலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்



(கல்லடி நிருபர்)

இந்த நாட்டுக்கு மீண்டும் மீண்டும் கடன்களை வழங்கி தமிழினத்தை அழிப்பதற்கு சர்வதேச சமூகம் உதவக்கூடாது. இவ்வேளையில் இங்கு நடைபெற்ற இன அழிப்புக்கான நீதி விசாரணைக்குரிய அழுத்தங்களை சர்வதேச சமூகம் வழங்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.





தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பை வெளிப்படுத்தும் வகையில், முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் கடந்த வெள்ளிக்கிழமை (13) கொக்கட்டிச்சோலை படுகொலை இடம்பெற்ற மகிழடித்தீவுச் சந்தியிலுள்ள கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத்தூபி முற்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் காட்சிப்படுத்தப்பட்டதோடு, முள்ளிவாய்க்கால் பேரவலக் காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்கால் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்ற படுகொலைகளில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்கு வழங்கப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் தொடர்பில் கருத்துகளும் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் கோறளைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சேகர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# லிங்க நகர் கடற்பரப்பில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(திருமலை நிருபர்)

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லிங்க நகர் கடற்பகுதியில் கடலில் மிதந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடல் பரப்பில் மீன் பிடிப்பதற்காக மீனவர்கள் கடலுக்குச் சென்ற நிலையில், குறித்த சடலம் மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் மற்றும் மீனவர்கள் இணைந்து குறித்த சடலத்தை கரைக்கு கொண்டு வந்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், திருகோணமலை லிங்க நகர் பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்ட சண்முகநாதன் கருணாகரன் (வயது-49) எனவும் தெரியவருகிறது.

குறித்த சடலத்தை திருகோணமலை மாவட்ட பதில் நீதவான் தர்ஷினி அண்ணாதுரை முன்னிலையில் குடும்பத்தினர் அடையாளப்படுத்தினர். மேலும் குறித்த சடலம் தொடர்பில் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறும் இதன்போது நீதவான் கட்டளையிட்டார்.

குறித்த சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தரொருவர் பலி

**மயிலம்பாவெளியில் சம்பவம்**



(மண்டூர் நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தன்னாமுனை பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரொருவர் மயிலம்பாவெளியில் இடம்பெற்ற விபத்தில் நேற்று முன்தினம் (14) உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தன்னாமுனை பிரதேசத்தைச் சேர்நத ஒரு பிள்ளையின் தந்தையான 40 வயதுடைய முத்துலிங்கம் சிவாகரன் என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் மயிலம்பா வெளி காமாட்சியம்மன் வீதியூடாக தனது மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும்போது மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலுள்ள முட்கம்பி வேலியில் மோதியதில் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எச்.எம்.ஹக்கீம் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டு தூதுவர்கள்- எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்குமிடையில் சந்திப்பு





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் பல்வேறு நாடுகளை சேர்ந்த தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது. இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி, இலங்கையில் உள்ள ஜேர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தூதுவர் ஹோல் கர் லோதர் சியூபர்ட், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்ட்டு, இலங்கைக்கான நெதர்லாந்தின் தூதுவர் தஞ்சா கோங்க்ரிஜ்ப், இலங்கைக்கான இத்தாலியின் தூதுவர் ரீட்டா கியுலியானா மானெல்லா, இலங்கைக்கான ரோமானிய தூதுவர் விக்டர் சியூஜெடா உள்ளிட்ட தூதுவர்களே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து சந்தித்தனர்.

இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய நிலைமை குறித்து இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதோடு, இலங்கையின் முன்னோக்கிய நகர்வுக்கு ஆதரவளிக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் தூதுவர்களிடம் கோரிக்கையும் விடுத்தார்.

# அமைதியை பாதுகாப்பதற்காக முப்படையினர் பணியில்





நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகால சட்ட பிரகடனத்தினையடுத்து, பாதுகாப்பு அமைச்சின் பூரண மேற்பார்வையின் கீழ் இலங்கை இராணுவத்தை முதன்மைப்படுத்திக் கொண்டு முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு நாட்டின் நீதி மற்றும் அமைதியினை பேணுவதற்கு பொதுமக்கள் மற்றும் பொதுச் சொத்துகளை பாதுகாக்கும் பொருட்டு தனது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

அவ் அமைதியான சூழலை மேலும் பேணுவதற்காக நேற்று முன்தினம் (14) இராணுவத்தின் விசேட படையணியின் மோட்டார் ரோந்துப்படை மற்றும் இராணுவ கவச வாகனங்களை பயன்படுத்தி கொழும்பு நகரை அண்டிய பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் திடீர் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

# எரிவாயுவுக்காக குணசிங்கபுர மக்கள் ஆர்ப்பாட்டம்









(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

குணசிங்கபுர மக்கள் சமையல் எரிவாயு பெறுவதற்காக பல நாட்கள் காத்திருந்தும் எரிவாயு கிடைக்காத நிலையில் நேற்று முன்தினம் (14) பிரதேசத்திலுள்ள பாதையை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிரதேசத்தில் போக்குவரத்து செய்யமுடியாது வாகனசாரதிகள் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

கடந்த வியாழக்கிழமை வாழைத்தோட்ட மக்களுக்கு எரிவாயு பெற்றுத்தருவதாக வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில், அம்மக்களுக்கு எரிவாயு பெற்றுக்கொடுக்க முடியவில்லை. குறித்த தினத்தில் நீண்ட வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு டோக்கன் கொடுத்த நிலையில், அவர்கள் கடந்த மூன்று நாட்களாக காத்திருந்தும் ஏமாற்றமே கிடைத்தது. இதன் காரணமாக மக்கள் கோபமடைந்து தமது கேஸ் சிலிண்டர்களை குணசிங்கபுர பிரதான வீதிக்கு குறுக்காக வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக அப்பகுதி போக்குவரத்து நீண்ட நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகை தந்த இராணுவ அதிகாரியொருவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு கதைத்து எதிர்வரும் புதன்கிழமை எரிவாயுவை பெற்றுத்தருவதாக உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

# நாடு மீண்டும் திருடர்களின் கையில்; மதுரங்குளியில் ஆர்ப்பாட்டம்






(ரஸீன் ரஸ்மின்)

ஜனாதிபதியை பதவி விலகக்கோரியும், பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்தும் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் புத்தளம் - மதுரங்குளி நகரில் கடந்த வெள்ளிக்கிழமை (13) எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“கோட்டா கோ ஹோம், நாடு மீண்டும் கள்வர்களின் கையில், மக்களுக்கு ஏமாற்றம் - போராட்டம் தொடரும்” இதுபோன்ற சில வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு, தலைகளில் கறுப்புநிறப் பட்டி அணிந்துகொண்டு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு மதுரங்குளி நகரிலிருந்து பிரதேச சபை சபா மண்டபம் வரை நடந்து சென்றனர்.

இதன்போது, புத்தளம் பிரதேச சபைத் தலைவர் ஆர்.பி.அஞ்சன சத்தருவான் தலைமையில் சபை நடவடிக்கை இடம்பெற்று கொண்டிருந்த போது, கோஷங்களை எழுப்பிய நிலையில் சபை நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கொழும்பு காலிமுகத்திடல் அமைதிப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும் பிரதேச சபை உறுப்பினர் சிலர் தமது கடும் கண்டனங்களை தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிக்கவெரட்டியவில் வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூடு



நிக்கவெரட்டிய, நாவான பிரதேசத்தில் வீடொன்றின் மீது சிலரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக கிரில்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என்பதுடன் இலக்கம் 12 வகையைச் சேர்த்த துப்பாக்கியினால் இந்த சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிக்கவெரட்டிய பிரதேசத்தில் கடந்த சில தினங்களில் இடம்பெற்றுவந்த தன்னெழுச்சியான போராட்டங்கள் தொடர்பில் செயற்பட்ட இளைஞரொருவரின் வீட்டின் மீது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த இளைஞரின் சகோதரி இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ளதுடன், அவர் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்துள்ளதுடன் அவரின் தலையின் மேல் பயணித்த துப்பாக்கி தோட்டா சுவரை துளைத்துச் சென்றுள்ளது. குறித்த வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பொதுத்தேர்தல் நடத்துவது தொடர்பில் குறுகியகால அட்டவணை அவசியம்

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தல்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பது மற்றும் புதிய பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் குறுகிய கால அட்டவணையொன்றை அறிவிக்கவேண்டும் என்றும் தேசிய சமாதானப்பேரவை கோரியுள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவரது நியமனம் குறித்து சர்ச்சைகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. தற்போதைய நெருக்கடிக்கு வழிவகுத்த நடைமுறைகளை தொடருகின்ற வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அதிகாரங்களை அடாத்தான முறையில் பயன்படுத்துகின்றார் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இலங்கை முன்னென்றும் கண்டிராத வகையிலான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள், பரந்தளவிலான மக்கள் போராட்டங்களுக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கும் நிலையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை கலந்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. பதிலாக சகல எதிரணிக் கட்சிகளின் அதிருப்திக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்தார். அதன் மூலமாக தேசிய ஐக்கிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டுவந்து முயற்சிகளுக்கு அவர் முடிவைக் கட்டினார்.

புதிய பிரதமருக்கு பல வருட கால அனுபவம் இருக்கிறது. நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அங்கம் வகித்துவரும் விக்ரமசிங்க, ஏற்கெனவே ஐந்து தடவைகள் நாட்டின் பிரதமராக பதவி வகித்திருக்கிறார். ஆனால், அவருக்கு முன்னால் பாரிய சவால்மிக்க பணி காத்துக்கிடக்கிறது. பிரதமரின் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனமே இருக்கும் நிலையில், அவர் நாடாளுமன்றத்தில் வேறுபட்ட சிந்தனைகளையும் அரசியல் நலன்களையும் நிபுணத்துவங்களையும் கொண்ட ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் பணியாற்றவேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் நாட்டு நலன்களை மனதில் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இது ஒரு வழமையான அரசாங்கம் அல்ல. தார்மீக மற்றும் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக நிறுவப்பட்ட ஒன்றாகும். அதனால், இந்த அரசாங்கம் பதவிகளுக்கு ஆட்களை, நாடாளுமன்றத்துக்குள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ தெரிவுசெய்யும்போது மிகவும் வேறபட்டமுறையில் செயற்படவேண்டிய தேவை இருக்கிறது.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதிலும் அரசியல் உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதிலும் பிரதமர் விக்ரமசிங்க, வெற்றிபெறவேண்டும் என்று வாழ்த்துகின்ற அதேவேளை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் முறிந்துபோன நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவது அவரது முக்கியமான இலக்குகளில் ஒன்றாக இருக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது. புதிய பிரதமர் அடையக்கூடிய வெற்றி அல்லது தோல்வி இலங்கையின் எதிர்காலத் தைத் தீர்மானிக்கும் என்பதால் குறுகிய நோக்கங்களுடனான பழகிப்போன அரசியல் நடைமுறைகளுக்கு அப்பால் தன்னை அவர் நிரூபிப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தினால் எதிரணிக் கட்சிகள் உள்ளடங்கலாக நாடாளுமன்றத்திற்குள் அவர் கருத்தொருமிப்பொன்றைக் கட்டி யெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. மீண்டெழுவதற்கான இந்த பொதுவான பணியில் சகலரும் அவருக்கு ஆதரவை வழங்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

ஒரு மாதகாலத்துக்கும் அதிகமான காலமாக கொழும்பு காலிமுகத்திடலிலும் நாட்டின் பல பாகங்களிலும் இடைவிடாமல் போராட்டங்களை நடத்துகின்ற சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் வெளிப்படுத்திவரும் அர்ப்பணிப்பை தேசிய சமாதானப் பேரவை மிகவும் மெச்சுகிறது. அவர்களது தியாகங்களே அரசியல் மாற்றத்தைச் சாத்தியமாக்கியிருக்கிறது. அரசாங்க அனுசரணையுடனான குண்டர்களினாலும் அரசாங்க விரோத குழுக்கள் மற்றும் தனிநபர்களினாலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை தேசிய சமாதானப்பேரவை கடுமையாக கண்டிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்கு சென்றிருக்கும் ஒரு நேரத்தில், நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்ற ஹோட்டல் கள் உட்பட தனியார் சொத்துகளையும் பஸ்களையும் தீயிட்டுக் கொளுத்துவதும் ஆட்களை கொலைசெய்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை யல்ல. அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது ஆளுங்கட்சியின் அரசியல்வாதிகளினால் தூண்டிவிடப்பட்ட வன்முறைகளே முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவிவிலக நிர்ப்பந்தித்தன என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் யார்யார் என்பதை கண்டறிந்து சட்டத்தின் முன்னால் அவர்களை பொறுப்புக்கூற வைக்கவேண்டியதும் முக்கியமானதாகும்.

ஊழலையும் வன்முறையையும் இன, மதவெறியையும் அனுமதிக்காத கட்டமைப்பு மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று நாம் அழைப்பு விடுக்கிறோம். அண்மையில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாம் கோருகிறோம். அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை காலந்தாமதிக்காமல் ஒழித்துவிட்டு இருவார காலத்திற்குள் நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரங்களை பாரப்படுத்தும் நடவடிக்கைகளே அவற்றில் முதன்மையானதாகும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பது மற்றும் புதிய பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் குறுகிய கால அட்டவணையொன்றை அறிவிக்கவேண்டும் என்றும் தேசிய சமாதானப்பேரவை கோருகிறது.

# உலக செய்திகள்

## உலகின் மிக நீள நடைபாதை தொங்கு பாலம் திறப்பு




உலகின் மிக நீளமான நடைபாதை தொங்கு பாலம் செக் குடியரசில் திறக்கப்பட்டுள்ளது.

இரு மலைமுகடுகளை இணைக்கும் வகையில் 2,365 அடி நீளத்தில் ஸ்கை பிரிட்ஜ் பாலம் உருவாக்கப்பட்டுள்ளது. 8.4 மில்லியன் டொலர் மதிப்பில் இரண்டு ஆண்டுகளில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 3,600 அடி உயரத்தில் பாலம் அமைந்துள்ளதால் வானத்தின் பாலம் என அழைக்கப்படுகிறது.

மேகக் கூட்டங்களுக்கு நடுவே ரம்மியமான காட்சிகளை காணத் துடிக்கும் சுற்றுலாப் பயணிகளை பாலம் வெகுவாக கவர்கிறது.

# புட்டினின் ஆட்சியை கவிழ்க்க ரஷ்ய இராணுவ அதிகாரிகள் சதி

## உக்ரைன் பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவின் தலைவர் புடனோவ் தெரிவிப்பு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் ஆட்சியை கவிழ்க்க அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் முயற்சித்து வருவதாக உக்ரைன் பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவின் தலைவர் புடனோவ் தெரிவித்துள்ளார்.

தனியார் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த மேஜர் ஜெனரல் புடனோவ், மூன்றே மாதங்களில் உக்ரைன் - ரஷ்யா போரில் பெரிய திருப்புமுனை ஏற்படும் என்றார்.

போரில் ரஷ்யா தோல்வியடைந்தால் புட்டின் பதவி இழக்க நேரிடும் எனத் தெரிவித்த அவர், புட்டினின் ஆட்சியை கவிழ்ப்பதற்கான பணிகளை ரஷ்ய இராணுவ அதிகாரிகள் சிலர் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

புற்றுநோய் உட்பட மேலும் சில நோய்களால் புட்டின் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அவர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சோர்வடைந்துள்ளதாகவும் புடனோவ் தெரிவித்துள்ளார்.

**உக்ரைன் ஏவுகணைத் தாக்குதல்**

உக்ரைனில் ரஷ்யா நடத்திவரும் தாக்குதல் இன்று 82ஆவது நாளை தாண்டி இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் மாகாணத்தைப் பிடித்து தனிநாடாக அறிவிக்க ரஷ்யா எடுத்துவரும் முயற்சிகளுக்கு உக்ரைன் இராணுவம் கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. இதன்மூலம், ரஷ்யப் படைகளின் முன்னேற்றமும், வெற்றியும் தடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், டான்பாஸ் மாகாணத்தில் ஓடும் சிவர்ஸ்கி என்ற ஆற்றில் தற்காலிக பாலம் அமைத்து ரஷ்யப் படைகள் கடக்க முயற்சி செய்தன. அப்போது, உக்ரைன் இராணுவம் ஏவுகணை மூலம் அந்த பாலத்தை தகர்த்து, கடுமையான தாக்குதலை நடத்தியது.

இதில், ரஷ்ய இராணுவத்தின் 100இற்கும் மேற்பட்ட கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டன. இதில் நூற்றுக்கணக்கான ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

அதில், ஆற்றுப் பகுதியில் பாலமும், ரஷ்ய இராணுவ வாகனங்களும் சின்னாபின்னமாகி கிடக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. உக்ரைனின் இந்தத் தாக்குதல், ரஷ்ய இராணுவத்துக்கு மிகப் பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது. இதுவரை, இந்தப் பாலத்தை ரஷ்ய இராணுவம் 3 முறை கடக்க முயற்சி செய்துள்ளது. அவை அனைத்தையும் உக்ரைன் இராணுவம் முறியடித்துள்ளது.

**போர் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்?**

ரஷ்யாவின் படையெடுப்பு இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என எவராலும் கணிக்க முடியாது என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் 12 வாரங்களை எட்டியுள்ள நிலையில், போர் நடவடிக்கை முடிவில்லாமல் இன்னும் நீடிப்பது உக்ரைன் மக்களுக்கு மட்டுமன்றி, உக்ரைனின் நட்பு நாடுகளுக்கும், உக்ரைனுக்கு உதவி வரும் நாடுகளுக்கும் துரதிர்ஷ்டவசமானது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யப் படைகள் கைப்பற்றிய பகுதிகளை உக்ரைன் இராணுவம் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதாகவும், அந்தப் பகுதிகளில் மின்சாரம், குடிநீர், சமூக வலைத்தள சேவைகளை மீட்டெடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது எனவும் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய அரபு இராச்சியத்தின் புதிய ஜனாதிபதி நியமனம்



ஐக்கிய அரபு இராச்சியத்தின் புதிய ஜனாதிபதியாக ஷேக் முகமது பின் சயத் அல்-நஹ்யான் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதியாகவும், டுபாய் ஆட்சியாளராகவும் பொறுப்பு வகித்துவந்த ஷேக் கலிபா பின் சையத், உடல்நலக் குறைவால் காலமானார். 75 வயதான ஷேக் கலிபா கடந்த 2004ஆம் ஆண்டில் அந்நாட்டின் இரண்டாவது ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

அவரது மறைவையடுத்து ஐக்கிய அரபு இராச்சியத்தில் 40 நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்றும், அரசு மற்றும் தனியார் நிறுவன அலுவலகங்கள் 3 நாட்கள் மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 61 வயதான ஷேக் முகமது பின் சயத் அல்-நஹ்யான் (Sheikh Mohamed bin Zayed Al Nahyan) ஐக்கிய அரபு இராச்சியத்தின் மூன்றாவது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதாக உயர்மட்ட அமைப்பு அறிவித்தது. இவர் கடந்த 2005ஆம் ஆண்டுமுதல் இராச்சிய இராணுவத்தில் துணை தளபதியாக பணியாற்றியுள்ளார்.



மேலும், அந்நாட்டு இராணுவத்தில் திட்டமிடல், பயிற்சி, பாதுகாப்புத் திறன் ஆகியவற்றை மேம்படுத்தியதில் இவருக்கு முக்கிய பங்குள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அழிவின் விளிம்பில் பென்குயின் இனம்



அண்டார்டிகாவிலுள்ள பென்குயின் இனம் இன்னும் 30 முதல் 40 ஆண்டுகளில் அழியும் அபாயம் உள்ளதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பருவநிலை மாற்றத்தால் அண்டார்டிகாவில் வானிலை மாறி, அதிக வெப்பம், சீரற்ற மழைப் பொழிவு என பனி வேகமாக உருகி வருவதாக உலக வானிலை அமைப்பு எச்சரித்துள்ளது.

காலநிலை மாற்றத்தால் பென்குயின் இனத்தில் பெரிய வகையான பேரரச பெங்குயின்கள் அழிவின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பனி உருகிவரும் வேகத்தால் அடுத்த 40 ஆண்டுகளுக்குள் பென்குயின் இனம் அழியும் சூழல் நிலவுவதாக ஆர்ஜெண்டின் அண்டார்டிக் நிறுவன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைக்கு யூரியா வழங்க இந்திய மத்திய அரசு முடிவு



பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு, 6.5 கோடி கிலோ யூரியாவை வழங்கி உதவ இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கை மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி மத்திய அரசு உதவிசெய்து வருகிறது.

இந்நிலையில், டில்லியில் நேற்றுமுன்தினம் மத்திய உரத்துறை செயலர் ராஜேஷ் குமார் சதுர்வேதியை இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட சந்தித்துப் பேசினார்.

அப்போது, இலங்கையில், நெல் அறுவடை காலம் தொடங்கியுள்ளதால், அதற்கு தேவையான யூரியாவை வழங்கி உதவக் கோரி கோரிக்கை வைத்தார்.

அவரின் கோரிக்கையை ஏற்று, இலங்கைக்கு 6.5 கோடி கிலோ யூரியாவை உடனடியாக அனுப்பிவைக்க ராஜேஷ் குமார் சம்மதம் தெரிவித்துள்ளார்.

# டில்லி வணிக வளாகத்தில் தீ: 27 பேர் பலி; 12 பேர் காயம்; 29 பேர் மாயம்



டில்லி வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு இத் தீவிபத்தில் 29 பேர் காணாமல்போயுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

டில்லி, முண்ட்கா மெட்ரோ ரயில் நிலையம் அருகேயுள்ள நான்கு மாடி வணிக வளாகத்தில் வெள்ளிக்கிழமை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர், தீயை அணைத்து 27 பேரின் உடல்களை மீட்டனர். காயங்களுடன் மீட்கப்பட்ட 12 பேருக்கு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்தவர்களில் ஏழு பேரின் அடையாளங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தீயில் கருகி உடல் உருக்குலைந்து இருப்பதால், அடையாளம் கண்டறியும் பணி சவாலாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தீ விபத்து நடந்தபோது, வணிக வளாகத்திலிருந்த, மேலும் 29 பேர் காணாமல்போயுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர்களும் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

## உடல் முழுவதும் தீப்பற்றியெரிய திருமண வரவேற்பு நடத்திய காதல் ஜோடி



அமெரிக்காவில் சாகசக் கலைகளில் ஈடுபடும் காதல் ஜோடி ஒன்று தங்களது திருமணத்தை வித்தியாசமாக நடத்த எண்ணி, உடலில் தீ வைத்து பங்கேற்றனர்.

சாகசக் கலைஞர்களான கேப் ஜெசாப் - ஆம்பிர் பாம்பிர் காதல் ஜோடி தங்களது திருமணத்தை வித்தியாசமாக நடத்த முடிவு செய்தனர். திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கையை பிடித்துக்கொண்டு நடந்துவந்த இந்த காதல் ஜோடி, முதுகு பகுதியில் தாங்களே தீயை பற்ற வைத்துக்கொண்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர்.

இதனைக் கண்டு அங்கிருந்தவர்கள் ஆரவாரம் செய்த நிலையில், சிறிதுநேரத்தில் பின்னால் நடந்துவந்த இருவர் தீயணைப்புக் கருவிகளை வைத்து தீயை அணைத்தனர். இந்த விபரீத சாகசத்தை செய்த காதல் ஜோடி முறையாக பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பிடிக்குள் வடகொரியா: 3 நாட்களில் 8.20 இலட்சம் பேருக்கு தொற்று



கொரோனா பரவலால், நாடு மிகப்பெரிய சவாலை எதிர்கொள்வதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன் வடகொரியாவில் முதன்முறையாக கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்ட நிலையில், உடனடியாக நாடு முழுவதிலும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

வடகொரியாவில் கடந்த 3 நாட்களில் மட்டும் 8,20,620 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன், இதுவரை 3.2 இலட்சம் பேர் நாடுமுழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேவேளை, ஒரே நாளில் 21 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா பரவல் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன், கொரோனா பரவலை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முடுக்கி விட உத்தரவிட்டுள்ளார்.

மேலும் நாட்டின் எல்லைகளிலும் வான்வழி மற்றும் கடல்வழி முனையங்களிலும் கண்காணிப்பை தீவிரப்படுத்த உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## ஒரு கையில் குழந்தை; மறு கையில் ட்ரொலி! இப்படியும் கதவை மூடலாம்



விமானத்தில் பெண்ணொருவர் ஒரு கையில் குழந்தை, மறு கையில் ட்ரொலியை வைத்துக்கொண்டு இருக்கைகளின் மேலே உயரமான இடத்தில் இருந்த உடைமைகள் வைக்கும் பகுதியின் கதவை காலால் மூடிய காட்சி சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் அந்தப் பெண் உடனடியாக காலை தூக்கி உடைமைகள் வைக்கப்படும் பகுதியின் கதவை மூடிவிட்டு சென்ற காட்சிகளை ஃபிகென் என்பவர் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்த வீடியோ தற்போது பலராலும் வேகமாக பகிரப்பட்டு வருகிறது.

## சிரியாவில் ஏவுகணை தாக்குதல்; 5 பேர் பலி

மத்திய சிரியாவிலுள்ள இராணுவத் தளங்களை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர்.

ஹமா மாகாணத்திலுள்ள மாஸ்யஃப் பகுதியிலுள்ள இராணுவத்தளங்களை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் கட்டடங்கள் சேதமடைந்ததுடன், அங்குள்ள வனப்பகுதியிலும் தீப்பிடித்துள்ளது.

பன்யாஸ், டார்டவுஸ், ஜாப்லே கடற்கரை நகரங்களிலும் வெடிச்சத்தங்கள் கேட்டுள்ளன. இந்நிலையில், பெரும்பாலான ஏவுகணைகளை வானிலேயே தடுத்து அழித்திருப்பதாக சிரியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் மனித வெடிகுண்டுத் தாக்குதல்; 3 குழந்தைகள் உட்பட அறுவர் பலி



பாகிஸ்தானில், இராணுவ வாகனத்தை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

வஜிரிஸ்தான் மாவட்டத்தில் மிரான்ஷா என்னும் பகுதியிலுள்ள சந்தை வழியாக பாதுகாப்புப் படையினரின் வாகனம் சென்றுகொண்டிருந்துள்ளது. அப்போது, உடலில் வெடிகுண்டை கட்டிக்கொண்டு பாதுகாப்புப் படையினரின் வாகனத்தை நோக்கி நடந்துவந்த மர்ம நபர், திடீரென வெடிகுண்டை வெடிக்கச் செய்திருக்கிறார்.

இந்த குண்டுவெடிப்பில் அங்கிருந்த 3 குழந்தைகளும் 3 இராணுவ வீரர்களும் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், அப்பாவி குழந்தைகளை கொலைசெய்த காட்டுமிராண்டிகளை பிடிக்கும் வரை ஓய மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




## ஆசிய விளையாட்டு விழாவுக்கு தகுதிபெற்ற இலங்கை ஹொக்கி அணி

ஆசிய விளையாட்டு விழாவுக்கான ஆடவர் ஹொக்கி போட்டியில் பங்குபற்றுவதற்கு இலங்கை அணி தகுதிபெற்றது. தாய்லாந்தின் பேங்கொக்கில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டு விழா ஆடவர் ஹொக்கி தகுதிகாண் சுற்றில் 5ஆம் இடத்திலிருந்து 8ஆம் இடம் வரையான நிரல்படுத்தலுக்கான அரையிறுதிப் போட்டியில் ஹொங்கொங்கை 5 - 2 என்ற கோல்கள் கணக்கில் இலங்கை அணி வெற்றிகொண்டது.

கொரோனா தொற்று நோய் பரவியதன் காரணமாக சீனாவின் ஹங்சுவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருந்த ஆசிய விளையாட்டு விழா ஒத்திவைக்கப்பட்டபோதிலும் தகுதிகாண் போட்டிகள் திட்டமிட்டவாறு நடைபெற்றுவருகின்றன. இதில் முதல் 6 இடங்களைப் பெறும் அணிகள் ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்ற தகுதிபெறும் என போட்டி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, 'ஏ' குழுவில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற ஓமான் மற்றும் தாய்லாந்து ஆகியனவும், 'பி' குழுவில் முதல் இரண்டு இடங்களைப்பெற்ற பங்களாதேஷ் மற்றும் இந்தோனேஷியாவும் ஏற்கனவே தகுதிபெற்றிருந்தன. இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் இலங்கையும், உஸ்பெகிஸ்தானும் வெற்றிபெற்றதன் மூலம் கடைசி 2 அணிகளாக ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்ற தகுதிபெற்றன.

## புதிய மைல்கல்லை எட்டிய ஜோகோவிச்

இத்தாலியின் தலைநகர் ரோமில் நடைபெற்ற இத்தாலியன் ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் உலகின் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் நோர்வே வீரர் கேஸ்பர் ருட்டை 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தினார்.

இவ்வெற்றி டென்னிஸ் உலகில் நோவக் ஜோகோவிச் பெற்ற ஆயிரமாவது வெற்றியாகும், ஜிம்மி கானர்ஸ், ரொஜர் ஃபெடரர், இவான் லெண்டில், ரஃபேல் நடாலுக்கு பிறகு இச்சாதனையை புரியும் 5ஆவது வீரர் ஜோகோவிச் ஆவார்.






## ஆஸி. கிரிக்கெட் வீரர் அகால மரணம்!

அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் அண்ட்ரூ சைமண்ட்ஸ் நேற்று முன்தினம் கார் விபத்தில் மரணமடைந்தார். இந்த செய்தி கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

சைமண்ட்ஸ் ஆஸி. நேரப்படி இரவு 10.30 மணியளவில் கார் விபத்தில் சிக்கினார். அவர் மட்டும் தனியாக காரில் சென்றுள்ளார். கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்து உருண்டு விழுந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில், சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

46 வயதாகும் சைமண்ட்ஸ், அவுஸ்திரேலிய அணிக்காக 26 டெஸ்ட், 198 ஒருநாள் சர்வதேச மற்றும் 14 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் விளையாடினார். 1999 - 2007ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஒருநாள் கிரிக்கெட் உலகை அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்தியபோது அந்த அணியின் முக்கிய தூணாக சிறந்த ஒரு சகலதுறை வீரராக வலம்வந்தார் அவர்.

தனது வித்தியாசமான ஹேர்ஸ்டைல் மூலம் கவனம் ஈர்க்கப்பட்ட அவர், ஓய்வுக்கு பின் ஃபாக்ஸ் கிரிக்கெட்டின் வர்ணனைக் குழுவில் இடம்பெற்று பணியாற்றி வந்தார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்ன் சில மாதங்களுக்கு முன்பு மாரடைப்பு காரணமாக உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "முரளியின் கோபம்தான் அணியின் ஃபார்மைக் குலைத்துவிட்டது" – கைப் குற்றச்சாட்டு



முத்தையா முரளிதரனின் கோபம்தான் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஃபார்மைக் குலைத்துவிட்டது என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் முகமது கைஃப் குற்றம்சாட்டியுள்ளார்.

ஐ.பி.எல் ஆரம்பத்தில் இரு போட்டிகளில் தோல்வியடைந்த சன்ரைசர்ஸ் அணி அடுத்தடுத்து 5 வெற்றிகளைப் பெற்றது. பின்னர் வரிசையாக 6 தோல்விகளைச் சந்தித்து ப்ளேஓப் சுற்றுக்கான வாய்ப்பை இழந்துள்ளது. இந்நிலையில் சன்ரைசர்ஸ் அணியின் தோல்விக்கான காரணம் குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் மொஹமட் கைப் தெரிவிக்கையில்,

"இப்போது சன்ரைசர்ஸ் அணி வலிமையான அணி என்று நான் நினைக்கவில்லை. ஒருநேரத்தில் வேகப்பந்துவீச்சில் வலிமையாக இருந்தது. ஆனால், ஜான்ஸனை நீக்கியது. அதன்பின் கார்த்திக் தியாகியை நீக்கியது. சில பந்துவீச்சாளர்களையும் நீக்கியபின் அந்த அணியால் எப்படி வலிமையாக இருக்க முடியும். அதே வலிமையான அணி இப்போது இல்லை. முதல் இருபோட்டிகளில் தோல்வியடைந்து அதன்பின் தொடர்ந்து 5 வெற்றிகளை சன்ரைசர்ஸ் அணி பெற்றது. நடராஜன், புவனேஷ்வர் குமார், உம்ரான் மாலிக், ஜான்ஸன் ஆகியோர் அணியில் இருந்ததால் வெற்றி சாத்தியமானது, 4 பந்துவீச்சாளர்களும் சேர்ந்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

ஆனால், இப்போது இந்த 4 பந்துவீச்சாளர்களும் ஒன்றாக ஆடுவதில்லை என்றபோது வெற்றி எவ்வாறு சாத்தியமாகும். மற்றொரு பிரச்சினை என்னவென்றால், வேகப்பந்துவீச்சாளர் ஜான்ஸன் பந்துவீச்சில், ரஷித் கான் சிக்ஸர்கள் அடித்ததைப் பார்த்தபின், அணியின் சுழற்பந்துவீச்சுப் பயிற்சியாளர் முத்தையா முரளிதரன், ஓய்வறைக்குச் சென்று வீரர்களிடம் தனது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தி கடுமையாக திட்டியுள்ளார். கொல்கத்தா அணியில் என்ன நடந்ததோ அதுதான் சன்ரைசர்ஸ் அணியிலும் நடந்திருக்கிறது."

"முரளிதரன் பெரும்பாலும் அமைதியாக இருக்கக் கூடியவர். ஆனால், ஜான்ஸனின் மோசமான பந்துவீச்சால் தனது பொறுமையை இழந்து கோபப்பட்டு பேசிவிட்டார். இதுபோன்று முரளிதரன் உள்ளிட்டவர்கள் நடக்கும்போது அணியின் ஃபார்ம் குலைந்துவிடும், ரிதம் சிதைந்துவிடும். அணிக்குள் சுழல் நல்லவிதமாக இருக்காது. அந்தப் போட்டிக்குப்பின் ஜான்ஸன் நீக்கப்பட்டார். ஆனால் விளையாடிய போட்டிகள் அனைத்திலும் ஜான்ஸன் சிறப்பாகவே பந்துவீசியிருந்தார். ஜான்ஸனை நீக்கிவிட்டு கார்த்திக் தியாகியைக் கொண்டுவந்தார்கள். என்னால் இவர்கள் செயலைப் புரிந்துகொள்ள முடியவில்லை." என கைப் தெரிவித்தார்.




## ராயுடுவின் ஓய்வில் குழப்பம் அவர் ஓய்வுபெறவில்லை என்கிறார் சி.எஸ்.கேவின் சி.ஈ.ஓ



"இதுதான் எனது கடைசி ஐ.பி.எல்" என ட்விட்டரில் பதிவிட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அனுபவ துடுப்பாட்ட வீரர் அம்பத்தி ராயுடு பின்னர் அதனை நீக்கியிருந்தார்.

முன்னதாக அம்பத்தி ராயுடு தனது ட்விட்டர் பக்கத்தில், "இதுதான் நான் பங்கேற்கும் கடைசி ஐ.பி.எல் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன். 13 வருடங்களில் 2 சிறந்த அணிகளில் அங்கம் வகித்து விளையாட எனக்கு ஓர் அற்புதமான நேரம் கிடைத்தது. இந்த அற்புதமான பயணத்தை அளித்த மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ்க்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்" என்று பதிவிட்டிருந்தார். நடப்பு ஐ.பி.எல் தொடரில் சிறப்பாக ஆடிவரும் ராயுடுவின் ஓய்வு ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்நிலையில் இப்பதிவை சில நிமிடங்களில் அவர் நீக்கினார். இதுகுறித்து எந்த விளக்கத்தையும் அவர் இதுவரை அளிக்கவில்லை. கடந்த 2019ஆம் ஆண்டு ஐ.சி.சி ஒருநாள் உலகக்கிண்ண தொடரில் தனக்கு இடம் கிடைக்காத நிலையில் அனைத்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக ராயுடு அறிவித்தார். தற்போது ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக சிறப்பாக விளையாடி வருகிறார் ராயுடு. ஐ.பி.எல்லில் 181 போட்டிகளில் விளையாடியுள்ள அம்பத்தி ராயுடு இதுவரை 4,000 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 22 அரைச்சதமும், ஒரு சதமும் அடித்துள்ளார்.

இந்நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை செயல் அதிகாரி காசி விஸ்வநாதன் தனியார் தொலைக்காட்சிக்கு விளக்கம் அளிக்கையில், "சரியாக செயற்படாததால் சற்று அவர் ஏமாற்றம் அடைந்துள்ளார். அதனால், தவறுதலாக அந்த ட்விட்டை பதிவிட்டுள்ளார். அவர் ஓய்வு பெறவில்லை. அவர் எங்களுடன் இருப்பார்" என்று விஸ்வநாதன் தெரிவித்தார்.

## தலையை தாக்கிய பந்து வலி தாங்க முடியாமல் அழுத முதியவர்

பஞ்சாப் கிங்ஸ் - ஆர்.சி.பி அணிகள் மோதிய போட்டியில் ஆர்.சிபி வீரர் ராஜத் படிதார் அடித்த பந்து முதியவர் ஒருவர் தலையில் விழுந்ததில் அவர் வலி தாங்காமல் அழத்தொடங்கினார். இந்த காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.



வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற போட்டியில் 211 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடுகையில் 8 ஓவரில் விளையாடிக்கொண்டிருந்த போது ராஜத் படிதார் களத்தில் இருந்தார். பஞ்சாப் வீரர் ஹர்பிரீத் பிரார் வீசிய பந்தை படிதார் அடித்த நிலையில், அந்த பந்து 102 மீற்றர் அளவில் சிக்ஸருக்கு சென்றது.

பந்து விழும் இடத்தில் போட்டியை காண வந்த முதியவர் அமர்ந்திருக்கவே, அவரது தலையில் விழுந்தது. இதனால் வலி தாங்க முடியாமல் முதியவர் அழுகத்தொடங்கினார். இதையடுத்து அவரை உடன் இருந்தவர்கள் ஆறுதல்படுத்தினர். முதியவருக்கு உடனடியாக மருத்துவ உதவி வழங்கப்பட்டது.

## பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் சம்பியனாக தெரிவு

(நிந்தவூர் நிருபர்)



பட்டிருப்பு வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி களுதாவனை பொது மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் செட்டிப்பாளையம் மகா வித்தியாலயத்தை எதிர்த்தாடிய பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிக்குடி அணி வெற்றியீட்டி இவ்வருட பட்டிருப்பு வலய மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

வெற்றிபெற்ற பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிக்குடி அணி மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பயிற்சி வழங்கிய உடற்கல்வித்துறை ஆசிரியர்களுக்கும், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கும் பாடசாலை முதல்வர் எம். சபேஸ் குமார், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை மற்றும் பழைய மாணவர் சங்கம் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

## ஆரம்பமானது முதல் டெஸ்ட்




சுற்றுலா இலங்கை அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று சட்டோக்ரம் நகரில் ஆரம்பமானது.

உபாதை காரணமாக இலங்கையின் கடைசி டெஸ்ட் தொடரில் ஓய்வு வழங்கப்பட்ட சகலதுறை வீரர் ரமேஷ் மெண்டிஸிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் துடுப்பாட்டவீரரான ஓசத பெர்னாண்டோவும் அணியில் நீண்ட இடைவேளையின் பின்னர் சேர்க்கப்பட்டார். இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் தொடர்கிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7